புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வரு அக்டோபர் மீ 7உ [ந. 218

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CCXVIII.**

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—*16-ம் பக்கம் பார்க்க.*

ஐஸன்ஹோவரின் பிரகடனம்.

"நேசப்படைகளின் பிரதம சேனாதிபதியான நான் ஜெர்மன் மக்களுக்கு பின் வருமாறு பிரகடனம் பகிரங்கப்படுத்துகிறேன் :—

1. "என் கீழ் போர்புரியும் நேசப்படைகள் இப்பொழுது ஜெர்மனியில் பிரவேசித்து விட்டன. நாங்கள் ஜெயித்தவர்களாகவே வருகிறோமேயல்லாது அடக்கியாளுபவர்களாக வரவில்லை. என் படைகளால் வசப்படுத்தப்பட்டுள்ள ஜெர்மன் பிரதேசங்களிலிருந்து நாஸி முறையையும், ஜெர்மன் ராணுவமுறையையும் நாங்கள் ஒழிப்போம். நாஸி ஆட்சியை நாங்கள் வீழ்த்துவோம். நாஸிக்கட்சியைக்குலைத்து, அக்கட்சி இயற்றியுள்ள கொடுமைகளான, ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டக்கூடிய சட்டதிட்டங்களை ரத்து செய்வோம். உலகத்தின் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படுத்திய ஜெர்மன் ராணுவ முறையை நாங்கள் அகற்றுவோம். குற்றம் செய்ததாகவோ, அல்லது அக்கிரமங்கள் செய்ததாகவோ சந்தேகிக்கப் பட்டிருக்கும் ராணுவத்தலைவர்களையும், இரகஸியப் போலீஸ் படையினரையும், இதரர்களையும் நாங்கள் கோர்ட்டு முன்பு நிறுத்தி விசாரிப்போம், அவர்கள் குற்றவாளிகள் தானென்று ருஜுவானால், குற்றத்துக்கேற்றவாறு அவர்களுக்குத்தண்டனை விதிப்போம்.

2. "எங்களால் கைப்பற்றப்பட்ட ஜெர்மனியில் சட்டமியற்றும் விஷயத்திலும், நிர்வாக விஷயத்திலும் நேசப்படைகளின் பிரதம சேனாதிபதி என்ற ஹோதாவிலும், ராணுவ கவர்னர் என்ற ஹோதாவிலும், எனக்குப் பரிபூரண அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்களை நான் செலுத்த இந்தப்பிரதேசங்களில் ராணுவ சர்க்கார் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. எனவே ராணுவ சர்க்காரின் சட்டங்கள் எல்லாவற்றிலும் நேசப்படை வசம் வந்த ஜெர்மனியில் வசிக்கும் யாவரும் தயக்கமின்றி கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். சட்டங்களை மீறுபவர்களை தண்டிக்க ராணுவ சர்க்காரால் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்படும்.

எதிர்ப்பு தயவுதாட்சண்யமின்றி நசுக்கப்படும்.

"நேசப்படைகளுக்கு எதிராய் நடத்தப்படும் எதிர்ப்புகள் எல்லாம் தயவு தாட்சண்யமின்றி அழிக்கப்படும். மற்றைய பெருங்குற்றங்கள் எல்லாம் கடுமையான தண்டனைகளுக்குள்ளாக்கும்.

3. "நேசப்படையின் வசமுள்ள ஜெர்மானியக்கோர்ட்டுகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்படும். ஜனங்களின் கோர்ட்டு சபை, விசேஷக்கோர்ட்டுகள், போலீஸ் கோர்ட்டுகள் ஆகியவற்றிலிருந்து அதிகாரங்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன. சரியான காலம் வந்தவுடன் ஜெர்மன் கிரிமினல், ஸிவில் கோர்ட்டுகள் மீண்டும் திறக்கப்படும்.

"எல்லா அதிகாரங்களும் அவரவர்கள் ஸ்தானத்திலிருந்து ஜெர்மன் சர்க்காருக்கோ மக்களுக்கோ, நேச ராணுவ சர்க்கார் அல்லது அதிகாரிகள் வெளியிடும், உத்தரவுகளுக்கோ பணிந்து நடக்கவேண்டும். அவற்றை அமுல் நடத்துவதும் அவர்களுடைய கடமை. இந்த உத்தரவு ஜெர்மனியின் எல்லா அதிகாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், அத்தியாவசியமான வேலையைச்செய்யும் மற்றயவர்களுக்கும் பிரயோஜனமாகும்."

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

26—9—44 (செவ்வாய்க்கிழமை).	செம்படை எஸ்தோனியாவைப் பூராவாக ஆக்கிரமித்தது.
	8-ம் படை இதாலியில் ரூபிகன் நதியைத் தாண்டியது.
27—9—44 (புதன்கிழமை).	ஆர்ன்ஹெம் பிராந்தியத்திலிருந்து ரைன் நதியின் தாழ்வரையிலுள்ள தெற்குக்கரைக்கு விமானமூலமிறங்கிய நேசதேசப்படைகள் பின்வாங்கிவிட்டன.
	ருஷ்யப் படைகள் எஸ்தோனியாவைச் சேர்ந்த வொர்ம்ஸி தீவை ஆக்கிரமித்தன.
28—9—44 (வியாழக்கிழமை).	நேசதேசப் படைகள் இதாலியில் பெல்லாரியாவைப் பிடித்தன.
	அமெரிக்கப் படைகள் பாலாத் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு தீவுகளிலிறங்கிவிட்டார்கள்.
29—9—44 (வெள்ளிக்கிழமை).	ருஷ்யப் படைகள் யூகோஸ்லாவியாவுக்குள் புகுந்தன.
30—9—44 (சனிக்கிழமை).	கலேயிலுள்ள ஜெர்மானியர்கள் சரண் புகுந்தார்கள்.
	நேசதேசப் படைகள் இதாலியில் மாண்டி பட்டாக்ளியாவைப் பிடித்தன.
1—10—44 (ஞாயிற்றுக்கிழமை.)	நேசதேசப் படைகள் கிரீட்டுக்கும், கிரீஸுக்கும் மத்தியிலுள்ள தீவுகளிலிறங்கின.
	நேசதேசப் படைகள் ஸீக்பிரட் அரணைத் தாக்கின.
2—10—44 (திங்கட்கிழமை).	வார்ஸாவில் போலிஷ் தேசாபிமானப் படைகளின் எதிர்ப்பு நின்றது.
	ருஷ்யர்கள் எஸ்தோனியாவுக்கு மேற்கிலுள்ள டாகோத் தீவைப் பிடித்தார்கள்.
3—10—44 (செவ்வாய்க்கிழமை).	நேசதேசப் படைகள் ஸீக்பிரட் அரணை ஊடுருவிச் சென்றன.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.

(1) **கடற்கரை பிரதேசம்.**—கேப் கிரிஸ் நெஸும், கலேயும் விழுந்துவிட்டன.

(2) **ஆண்ட்வெர்ப்—டர்ன்ஹௌட் பிராந்தியம்.**—ஆண்ட்வெர்ப்புக்குச் சமீபத்தில் ஷெல்ட் நதியின் முகத்துவாரத்திலுள்ளதும், தாழ்ந்த பிரதேசமுமான வால்செரன் தீவு பேரில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. மேற்கு கபெல்லிக்குச் சமீபத்தில் 200 அடி அகலமுள்ள அணை உடைக்கப்பட்டது. தீவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. அதிலுள்ள ஜெர்மன் படைகள் அகப்பட்டுக்கொண்டார்கள். ஷெல்ட்டிலிருந்து பின்வாங்குவதற்கும், ஆண்ட்வெர்ப்பை ரக்ஷிக்கவும் அந்தத் தீவை கேந்திர ஸ்தானமாக ஜெர்மனி உபயோகித்து வந்தது.

ஆண்ட்வெர்ப் கால்வாயின் நான்கில் மூன்று பாகமும், ஆண்ட்வெர்ப்பின் சுற்றுப்புறத்திலுள்ள மெர்காமும் நேசதேச வசமாகிவிட்டன. மெர்க்ஸ்பிளாஸும், ரெக்மே, வீல்டியும் பிடிபட்டன.

(3) நிஜ்மேகன் முனை.-மியூஸ் நதி பிரதேசம் சுத்தி செய்யப்பட்டுவிட்டது. சர்பாரா வரும் மார்க்கம் ஆஸ் முதல் பாக்ஸ்மீர் வரையில் விஸ்தாரப் படுத்தப்பட்டிருக்கிறது. நிஜ்மேகன் பால முனையைத் திருப்பிப் பிடிக்க எதிரி செய்த பிரயத்தனம் வீணாகிவிட்டது. நிஜ்மேகனுக்கும் ஆர்ன்ஹெமுக்கும் மத்தியிலுள்ள எல்ஸ்ட் பிடிபட்டது.

(4) ஸீக்பிரட் அரண்.—ஸீக்பிரட் அரண் பூராவிலும் புதிய தாக்குதல் துவக்கமாகிவிட்டது. ஆகனுக்கருகில் ஒரு குறுகிய இடத்தில் அரண் ஊடுருவிச் செல்லப் பட்டது. மல்லாகோர்ட், ஜல்லான்கோர்ட், சாம்பிரே (இவையெல்லாம் நான்சிக்கு சமீபத்திலிருக்கின்றன). லக்ஸம்பர்க்குக்குச் சமீபத்திலுள்ள கிரவென் மேகரும் விழுந்து விட்டன.

(5)ஜெர்மனியில்.—நேசதேச விமானங்கள் 12,000 ராத்தல் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் போட்டு டார்ஸ்மண்ட்—எம்ஸ் கால்வாயை அநேக இடங்களில் உடைத்து விட்டன.

கிழக்குப் போர்முனை.—எஸ்தோனியாவுக்குச் சொந்தமான டாகோ, வோர்ம்ஸி, மூபூ தீவுகள் விழுந்தன. ஜெர்மானியர்கள் லாத்வியாவைக் காலி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். செம்படை அதன் தலைநகரமான ரீகாவை நோக்கி முன்னேறுகிறது. பின்னிஷ் எல்லைச் சரகத்திலுள்ள டொர்ன்ஸ் நகரைப் பிடிக்க பின்லாந்துப் படைகள் ஜெர்மன் படைகளுடன் போர்புரிகின்றன. ருஷ்ய விமானங்களும் யுத்தக் கப்பல்களும் வடக்கு நார்வேயிலுள்ள ஜெர்மன் தற்காப்பு தளமான வாட்ஸாக்கைத் தாக்கின.

(2) வார்ஸாவில் ஜெனரல் போரிடமிருந்த போலீஷ் உள்நாட்டுப் படைகள் ஜெர்மனியிடம் சரண்புகுந்தன.

(3) ஸெக்கோஸ்லோவேகியாவுக்கான போர் துவங்கி விட்டது. ருஷ்யப் படை கார்பேதியன் மலைகளிலுள்ள பெஸ்கிட்டன் கணவாயைத் தாக்கி வருகிறது.

(4) ருஷ்யர்கள் ஹங்கேரிக்குள் புகுந்துவிட்டார்கள். ருமேனியர்கள் ஹங்கேரியில் கை யூலாவைப் பிடித்தார்கள்.

(5) டிரான்ஸில்வேனியாவில் மியூரெஸ் நதியில் முன்னேறும் வாசலை ஏற்பாடு செய்யப் போர் நடைபெறுகிறது. ரெகி விழுந்து விட்டது.

(6) கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் சென்ற நேசதேசப் படைகள் எட்ரியாடிக் கடற்கரையிலும், ஆல்பேனியாவிலும், யூகோஸ்லாவியாத் தீவுகளிலும், டிரான்ஸில்வேனியாவிலும் போரை நடத்துகின்றன.

(7) யூகோஸ்லாவியாவில் ஜெர்மானியர்கள் விர்ஸட்டிலிருந்தும், பேலா ஆர்குவாவிலிருந்தும் போருக்கு இழுக்கப்பட்டார்கள்.

(8) பிரிடிஷ் படைகள் கிரீட்டுக்கும், கிரீஸுக்கும் மத்தியிலுள்ள மூன்று தீவுகளிலிறங்கி விட்டார்கள்.

இதாலி.—இந்த வாரத்தில் ரிமினி—பொலோனா ரஸ்தாவிலுள்ள இமோலா விழுந்து விட்டது. நேசதேசப் படைகள் பூடாக் கணவாயில் பிரன்ஸுலாவிலிருந்து வெளியேறும்படி நேர்ந்தது.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்களும் பிடிபட்டன.

பெல்லாரியா, காஸ்டல் டெல் ரியோ, காஸ்டிக்ளியோன், மாண்டி பாட்டாக்ளியா, சான் மாரோ டிரோமாக்னா, மாண்டி காபெல்லா, மான்கிடோரோ, மாண்டிலால்டோ, மாண்டி காவாலரா, புரோகி.

மாண்டிபட்டாக்ளியாவிலிருந்து நேசதேசத்தார்களை அப்புறப்படுத்த ஜெர்மானியர்கள் பதில் தாக்குதலைச் செய்து வருகிறார்கள்.

பசிபிக்.—அமெரிக்கர்கள் பாலாத் தீவுக் கூட்டத்திலுள்ள நாக்ஸிபஸ், கோன்காரு என்ற தீவுகளிலிறங்கிவிட்டார்கள். முதல் தீவு பூராவாக ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

சைனா.—அமெரிக்க விமானப்படை டான்சங்கிலுள்ள ஜப்பானிய விமானதளத்தை அழித்துவிட்டது.

பர்மா.—நேசதேசப் படைகள் டிட்டிமை நோக்கிக் குவிந்துவிட்டன.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

24—9—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்—ஜெர்மன் கப்பல்கள்—வட கடல் (North Sea).

துறைமுக ஸ்தாபனங்கள்.-ஏதென்ஸ் (Athens) பிரதேசம்.

ரயில்வே தளங்கள்.-ஸலோனிகா (Salonika).

3 விமான நிலயங்கள்.—ஸலோனிகாவிற்குக் கருகில் (Salonika).

ஜெர்மன் டாங்கிகள்.-பிரான்ஸிஉள்ள நான்ஸி (Nancy).

இதர இலக்குகள் :—யுத்தம் நடக்கும் பிர தேசங்கள்.

இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

இதாலி (Italy).

ரயில்வே தளங்கள், மோட்டார் போக்குவரத்து கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகங்கள், கப்பல்கள்.—மோனின் தீவுக் கூட்டத்திஉள்ள சிசிஜிமா (Chichijima).

மார்கஸ் (Marcus) தீவுகள், ரோடோலூயிட் (Rotaoaluit), வொட்ஜி (Wotji), மாலி (Mali).

சைனுவிஉள்ள நாங்கிங் (Nanking).

கப்பல்கள்.—பார்மோஸா (Formosa), ஜல சந்தி.

பர்மா (Burma).

ரயில்வே தொழிற்சாலைகள்.-மதிங்(Myitnge).

ஸப்ளைக் துவியல்கள், எதிரி சைனியங்கள்.—அரக்கான்.

சேமிப்புகள்.—மத்திய பர்மா (Central Burma).

பாலங்கள்—பாமு (Bhamu) பிரதேசம்.

25—9—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள், இதர ராணுவ, தொழிற்சாலை இலக்குகள்.—ஜெர் மனியிஉள்ள பிராங்க்பர்ட் (Frankfurt), காப்லென்ஸ் (Coblenz), லட்விக்ஷேபன் (Ludwigshafen).

காவலுடன்கூடிய எதிரி நிலயங்கள்.—பிரான் ஸிஉள்ள கலே (Calais).

கவசம் பூண்ட வண்டிகள், எதிரி சைனியங் கள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிர தேசங்கள்.

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—ரூர் (Ruhr).

ரேடியோ ஸ்தாபனங்கள்.—காப் கிரிஸ் நெஸ் (Cap Gris Nez).

போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள், இதர ராணுவ இலக்குகள் —யூகோஸ்லாவியா (Yugoslavia), அல்பேனியா (Albania).

துறைமுக ஸ்தாபனங்கள்.-ஸாலமி (Salamie) ஸ்லராமங்கா (Slaramanga), பிரெஸ் (Piraeus).

இரவு.-ரூரிஉள்ள மான்ஹீம் (Mannheim).

இதாலி (Italy).

ராணுவ இலக்குகள்.—வட இதாலியிஉள்ள யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஹால்மஹேரா (Halmahera), போர்னியோ (Borneo).

கடற்கரைக் கப்பல்கள்.—பாஸிலான் (Basilan) தீவு.

நகரங்கள்.—லாட்டெம் (Lautem).

விமான எதிர்ப்பு பீரங்கி நிலயங்கள் டிமோர் (Timor).

ரயில்வே ஜங்ஷன்.—முனிவா (Monywa).

நாம்காம் (Namkham).

ரயில்வே பாலம்.—டாண்டாபின் (Tantabin).

3 பாலங்கள்.—மாண்டலே (Mandalay).

பெட்ரோல் துவியல்கள், மோட்டார் போக்கு வரத்துகள், பாலங்கள்.-டிடிம் (Tiddim).

நதியில்செல்லும் கப்பல்கள், சேமிப்புகள், மோட்டார்ப் போக்குவரத்துகள்.-ஐராவதி (Irrawaddy).

26—9—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்-ஹாம் (Hamm).

தொழிற்சாலை இலக்குகள்.—பிரெமென் (Bremen).

யுத்ததளவாடங்கள், சேனைகள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்,ஸ்டீல் தொழிற்சாலைகள்.-ஆஸ்னபிரக் (Osnabruck).

ராணுவ இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிர தேசங்கள்.

இரவு.—ரஸ்தா, ரயில், நதிபோக்குவரத்துகள் ஹாலந்து (Holland).

தொழிற்சாலைகள் நிறைந்த நகரம் ரயில்வே மத்திய ஸ்தலம்.-கார்ல்ஸ்ரூகி (Karlsruhe).

இலக்குகள்.—பிராங்க்பர்ட் (Frankfurt).

தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள்.—எஸ்ஸன் (Essen).

இதாலி (Italy).

ரயில் ரஸ்தா பாலங்கள்.—போ (Po) சமவெளி.

துருப்பு முகாம்கள், ரயில் லயன்கள், சேமிப்புகள், ஸப்ளைக் குவியல்கள்—யுத்தம் நடக்கும் பிரதேசஙகள்.

தூரக்கிழக்கு (Far East).

ஸ்டீல் தொழிற்சாலைகள்— மஞ்சூரியா (Manchuria).

ராணுவ இலக்குகள்—லொயாங் (Loyang), காய்பெண்டு (Kaifend).

கப்பல்கள்—பிலிப்பைன்ஸ் (Philippines).

பர்மா (Burma).

ரயில் தளங்கள்.—மாண்டலே (Mandalay). பாமோ (Bhamo).

மோட்டார் போக்கு வரத்துகள்—வான்லிங் (Wanling).

எதிரி சைனியங்கள், மோட்டார் போக்கு வரத்துக்கள், முகாம்கள்.—அரக்கான் (Arakan), டிடிம் ரஸ்தா (Tiddim Road), மாலெய்க் (Mawlaik).

சேமிப்புகள்—நீராவி யந்திரங்கள்—ரஸ்தா, நதிப் போக்குவரத்துகள்.—டவுங்கூ (Toungoo) முதல் மாண்டலே (Mandalay) வரை செல்லும் ரயில்வே லயன்.

27—9—44. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—டாங்கித் தொழிற்சாலைகள்—காஸ்ஸெல் (Kassel).

ரயில் ரோட் தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள ஒபாபு (Opapu).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen).

ரயில் ரோட் தளங்கள், தொழிற்சாலை இலக்குகள்.—கொலோன் (Cologne).

ரயில் ரோட் தளங்கள்.—மெய்ன்ஸ் (Mainz).

இலக்குகள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

போக்குவரத்துகள்.—ரூர் (Ruhr).

இரவு.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—கெய்ஸர்ஸ்லாட்டர்ன் (Kaiserslautern).

இதாலி (Italy).

துருப்பு முகாம்கள், போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசத்திலும், வெளியிலும்.

கப்பல்கள்.—ஜினேவா (Genoa) வளைகுடா, எட்ரியாடிக் (Adriatic).

தூரக்கிழக்கு (Far East).

2 ஜப்பானிய துருப்புக் கப்பல்கள்.—பிலிப்பைன்ஸிற்குத் தெற்கு.

ஜப்பானியப் போக்குவரத்துக் கப்பல்கள்—ஸுலு ஆர்ச்சிபிலாகோ (Sulu Archipelago).

பர்மா (Burma).

இலக்குகள்.—வான்லிங் (Wanling), டிடிம் (Tiddim) ரஸ்தா.

28—9—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—யுத்தத் தொழிற்சாலைகள், மாக்டிபர்க் (Magdeburg), காஸல் (Kassel), மெர்ஸிபர்க் (Merseburg).

உதவி.—ஹாலந்திலுள்ள தரைப்படைகள்.

ரயில்வே இலக்குகள், கப்பல்கள்.—ஸ்கில்ட் (Scheldt).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—எம்மெரிக் (Emmerich).

ரயில்வே போக்குவரத்துகள்.—காப்லென்ஸ் (Coblenz), பிராங்க்பர்ட் (Frankfurt), மான்ஹீம் (Mannheim), கார்ல்ஸ்ரூ (Karlsruhe), ஆக்ஹென் (Aachen), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

தாக்குதல்கள்.—அல்பேனியா (Albania), யூகோஸ்லாவியா (Yugoslavia), கிரீஸ் (Greece).

இரவு.—இலக்குகள்—பிரன்ஸ்விக் (Brunswick).

விமான நிலயங்கள்.—எதிரி அரணுக்குப்பின்.

இதாலி (Italy).

ரயில் லயன்கள், ரஸ்தாக்கள்.—வடமேற்கு இதாலியக் கடற்கரை.

எதிரிக் கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள்.—மத்திய பிலிப்பைன்ஸிற்கு அருகில் (65 ஜப்பானியக் கப்பல்களும், 35 விமானங்களும் நாசமாக்கப்பட்டன).

இலக்குகள்.—ஹரிகோ (Hariekoe), நாம்லியா (Namlea).

விமான நிலயங்கள், எண்ணெய்க்கிணறு ஸ்தாபனங்கள், பெறும் பாதைகள்.—ஸீரம் (Ceram), டிமோரிலுள்ள புயிலோர் (Fuilore).

ஜப்பானியக் கப்பல்கள்.—பாலிக்பாப்பான் (Balikpapan), தென்கிழக்கு கெண்டாரி (S. E. Kendari).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

29—9—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலைகள்—மெர்ஸ்பர்க் (Merseburg).

ரயில்வே தளங்கள்.—மாக்டிபர்க் (Magdeburg).

டாங்கித் தொழிற்சாலை.—காஸ்ஸல் (Kassel).

போக்குவரத்துக்கான ஸப்ளைகள்.—ஸீக்பிரட் அரணுக்குப்பின்.

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

இரவு.—ராணுவ இலக்குகள்—கார்ல்ஸ்ருகி (Karlsruhe).

சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

ரயில் ஸ்தாபனங்கள்.—மிலானிற்குத்தெற்கு (South of Milan).

கப்பல்கள்.—ஏட்ரியாடிக் (Adriatic).

தூரக்கிழக்கு (Far East).

4 ஜப்பானிய கப்பல்கள்.—போர்னியா (Borneo).

பர்மா (Burma).

துருப்பு முகாம்கள்.—பூதிடாங் (Buthidaung).

கப்பல்கள்.—மார்டாபன் (Martaban) வளைகுடா.

30—9—44. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே ஸ்தாபன தளங்கள்—ஹாம் (Hamm), மன்ஸ்டர் (Munster), பீல்பெல்ட் (Bielefeld).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—பொட்ராப் (Bottrop), ஸ்டெர்க்கிரேட் (Sterkrade).

இலக்குகள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

போக்குவரத்துகள்—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhine land).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

25—9—44. (திங்கட்கிழமை) &
26—9—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

27—9—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்—ரிகா (Riga).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

28—9—44. (வியாழக்கிழமை) to
1—10—44. (ஞாயிற்றுக்கிழமை.)

பிரிடன் (Britain),
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

ஆதாரமற்ற பேச்சுகள். சமீபகாலத்தில் இதாலிக்கு விஜயம்சென்று தாயகம் திரும்பிய இந்தியா மந்திரியான மிஸ்டர் அமெரி இந்திய ஸோல்ஜரைப்பற்றி சொல்லப்பட்ட சில அவதூறுகளை மறுத்துப் பேசியிருக்கிறார். பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லையென்றாலும், தவறாக பிரகடனம் செய்பவர்கள் விஷயங்களை ராஜீயத்துடன் பிணைத்துவிட்டால் அளவுகடந்து அவதூறு சொல்லக்கூடும். அமெரிக்காவில் ஜனாதிபதி தேருதல் நடைபெறப்போகிறது. ஆகையால் அமெரிக்கர்கள் கடல்தாண்டியிருக்கும் இந்திய சிப்பாயையும் தூஷிக்க முற்பட்டுவிட்டார்கள்.

இந்தியாவின் சிறந்த ஐதீகப்படி இந்திய ஸோல்ஜர் மன்னருக்காகவும், தேசத்துக்காகவும், போர்புரிந்துவருகிறான். எல்லைப்போல் அவன் தன்னுடைய சேவையை உறுதியுடன் செய்துவருகிறான். இதை நேசதேசத்தார்களும், அச்சுநாட்டார்களும் அறிவார்கள். இதாலிய சாம்ராஜ்யத்தை இழக்கும்படி செய்தவர்கள் இந்தியர்கள் என்று இதாலியர்கள் அறிவார்கள். இதாலியிலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடிப்பவர்களும் இந்தியர்கள்தான் என்று ஜெர்மானியர்களும் அறிவார்கள். பிரிடன் தனியாக நின்றபொழுது உதவிக்கு முன்வந்தது இந்திய சிப்பாய்தான். மத்திய கிழக்குப் பிரதேசத்தைக் காப்பாற்றியவனும் அவன்தான். அஸ்ஸாம் எல்லையைத்தாண்டி இந்தியாவைத்தாக்க ஜப்பான் முன்னேறியபொழுது அவனைத் தடுத்ததும் இந்திய ஸோல்ஜர்தான். இந்திய ஸோல்ஜர் ஐந்துவருஷங்களாக இடைவிடாமலும், எல்லா தேசங்களிலும், எல்லா பருவ காலங்களிலும், பள்ளத்தாக்குகளிலும்,

மலைப்பிராந்தியங்களிலும், வெள்ளப்பெருக்கிலும் போர்புரிந்திருக்கிறான். அவன் எதிரியுடனும், காட்டுமிருகங்களுடனும், வியாதியுடனும் எதிர்த்துப் போர் செய்திருக்கிறான். அவன் ஒருபொழுதும் ஆயாசப்படவில்லை. எங்கு போர்புரிந்தாலும் அவனுடைய உறுதியும், ராஜ விசுவாசமும், தீரமும், சாம்ராஜ்ய ஸோல்ஜர்களில் அவனுக்கு அழியாப்புகழை அளித்திருக்கின்றன.

ஆகிலும் குறைகூறுகிறவர்களின் வாயை ஒருவரும் மூடமுடியாது. இந்திய சிப்பாய் சம்பளச் சேவகனென்றும், பயங்காளி என்றும் சொல்லப்படுகிறது. பர்மாப் போர் சாவதனமாக நடைபெறுவதால் அவன் பயங்காளி என்று சொல்லப்படுகிறது.

சம்பளச் சேவகன் என்று சொல்லுவது விரோதமாகயிருக்கிறது. குடும்ப வாழ்க்கையை நடத்த ஊதியமன்னியில் எவரும் வேலை செய்யமாட்டார்கள். அமெரிக்க ஸோல்ஜர் மற்றவர்களைவிட அதிகச்சம்பளம் பெற்றுவருகிறான். அதைப்பற்றி ஒருவரும் குறைகூறவில்லை.

இந்திய சேனையிலுள்ள 30 லக்ஷம் ஸோல்ஜர்களும் தன்னிச்சையாக சேவைக்குவந்தவர்கள். ஒருவரும் கட்டாயத்தின்பேரில் சேர்க்கப்படவில்லை. ஆசைவார்த்தைக்குட்படவில்லை. ரெக்ரூடிங் ஆபீஸில் ஏராளமான ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆட்களைச் சேர்ப்பதற்கு முஸ்தீப்புக் குறைவும், பயிற்சி வசதிக்குறைவும்தான் இடையூராகயிருக்கின்றன.

இந்தியாவின் சில பாகங்களில் பஞ்சம் தாண்டவமாடுவதினால்தான் இந்தியாவில் ரெக்ரூடிங் வெற்றிகரமாக நடைபெறுகிறதென்று குறைகூறுகிறவர்கள் சொல்லுகிறார்கள். இது உண்மைக்கு விரோதமானது. உண்மையில் இந்தியாவில் ஒரு இடத்திலும் பஞ்சமில்லை. விலைவாசி அதிகரிப்பின்மூலம் விவசாயி எதிர்பார்த்ததற்கு மேலாகவே அவனுக்கு அதிக லாபம் கிடைத்துவருகிறது. விவசாயத்தையும், அவனுடைய லாபத்தையும் கைவிட்டு விடும்படியாகவும், குடும்பம், வீடு, வாசல்களைவிட்டுச்சென்று அபாயத்துக்குட்பட்டாமல் யுத்த சேவையிலீடுபடவும் அவனுக்கு சேனையில் போதுமான சம்பளம் வழங்கப்படவில்லை.

மேலும் ரெக்ரூட்டுகள் குறிப்பிட்ட சில பிரதேசங்களிலிருந்தும், வகுப்புகளிலிருந்தும் வருகிறார்களென்றும் குறைகூறப்படுகிறது. இது இந்தியாவுக்குமட்டும் அன்வயிக்கக்கூடியதில்லை. பிரிடிஷ் கடற்படைக்கு தெற்கு இங்கிலாந்திலுள்ளவர்கள்தான் வருகிறார்கள். இதற்குக் காரணங்கள் விசித்திரமானவை. எந்த பிரதேசத்திலும், எந்த வகுப்பிலும் நம்பிக்கைக் குறைவும், உத்சாகக்குறைவும் ஏற்பட்டிருப்பதுதான் காரணமென்று சொல்லுவதற்கில்லை.

இந்திய ஸோல்ஜர் சிறந்த ஸோல்ஜரில்லையென்றும், அற்பமான உறுதியுள்ளவனென்றும் சொல்லப்படுகிறது. யுத்தத்தில் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் இந்தியர்கள் பெற்ற வீரப்புகழ் இதற்குத் தகுந்த பதிலளிக்கும்.

வி வி வி வி வி

இந்தியாவின் சிறந்தபடை. மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி 14-வது சேனைதான் இந்தியாவின் சிறந்தபடை. ஆகிலும் அதன் சேவையை ஆச்சரியப்படக்கூடிய முறையில் குறைகூறிவருகிறார்கள். ஸ்டில்வெல் மிட்கினாவைப் பிடித்த சம்பவத்துடன் ஒப்பிட்டு 14-வது சேனையின் நடவடிக்கை இழிவானதென்று சொல்லிவருகிறார்கள். பர்மா எல்லைச்சரக நடவடிக்கை உபயோகமற்றதென்றும், மந்தமானதென்றும் சொல்லப்படுகிறது. ஹிமாலய மலைகளைத்தாண்டி சைனாவுக்கு விமான மூலம் ஸப்ளைகளைக் கொண்டுபோவதிலும், பர்மா ரஸ்தாவைத் திறந்துவிடுவதிலும் அமெரிக்கர்கள் செய்த பிரயாசையை நாம் குறைத்துக்கூறவில்லை. ஆகிலும் ஜப்பானுடன் மகத்தான தரைப்போரை நடத்தி வெற்றிபெற்ற இந்தியப் 14-வது சேனையை தூஷிப்பது நியாய விரோதமானது.

மிஸ்ட்டர் சர்ச்சில் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"பர்மாப் போர்முனையில் ஒருவருஷமாக நடைபெற்ற போர் மிகவும் கடுமையானது. இடைவிடாது நடைபெற்றது. சில சமயங்களில் போரின் முடிவு சந்தேகிக்கக்கூடியதாகயிருந்தது. ஆகிலும் இந்தியாவைப் படையெடுக்கவும், விமான ஒத்தாசையை ஒழிக்கவும், முயன்ற ஜப்பானியப் படைகளைத் துரத்தியடித்ததற்கு பருவகால அசௌகரியத்தையும் பொருட்படுத்தாமல் கடும்போர் நடத்தியதுதான் காரணமாகும்.

"இந்த உண்மைகளை நாம் பகிரங்கப்படுத்தவேண்டும். ஏனெனில் பர்மாப் போரின் அட்மிரல் மௌண்ட்பேடன் நடத்திய போர் ஜப்பானை எதிர்த்து நடத்திய தரைப்போர்களில் முக்கியத்துவமுள்ளதாகும்.

"இது அற்பமான ஏமாற்றமளிக்கக்கூடிய அயர்வல்ல. ஜப்பானுடன் நடத்திய தரைப் போரில் இது மகத்தான போராகும். இந்தப்போரில் 50,000 முதல் 60,000 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டார்கள். அநேகர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்."

வி வி வி வி வி

மிஸ்ட்டர் சர்ச்சிலின் யுத்த விமர்சனம். மேலே சொல்லிய அபிப்பிராயத்தை மிஸ்ட்டர் சர்ச்சில் ஸெப்டம்பர் மாதம் 28-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் சொற்பொழிவாற்றியபொழுது வெளி யிட்டார். கிவீபெக்கிலிருந்து திரும்பிவந்தபின் அவர் ஆற்றிய சொற்பொழிவில் யுத்தப் போக்கை விமர்சனம் செய்ததுடன் ராஜீய, ராணுவ நிலமையையும் விமர்சனம் செய்தார். மேலும் ஜெர்மனி ஆக்கிரமித்திருந்த ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின்ஒன்றாய் விடுவிக்கப்பட்டன. ஜெர்மனிக்குள் படைகள் புகுந்துவிட்டன. ஆகையால் மேற்குப் பக்கத்தில் போர் முடிவை அணுகிவருகிறது. இந்தப் போர்முனையில் ஏற்பாடான போர் கூடிய சீக்கிரம் நின்றுவிடும். ஜெர்மனியில் இனிமேல் கொரில்லா நடவடிக்கை மூளும். நாஸிகளைத் துடைத்துவிட சிறிது காலதாமதமாகும். நாஸிகளின் பூண்டில்லாமல் அழிபடும் வரையில் நேசதேசத்தார்கள் காத்திருக்கப்போவதில்லை. ஒரு குறிப்பிட்ட தேதியில் ஐரோப்பியப் போர் முடிவடைந்துவிட்டதாக நேசதேசத்தார்கள் வெளியிட்டுவிடுவார்கள். ஆசியாவில் போரைத்துவக்க அந்தப்படைகள் அனுப்பப்படும். நேசதேசக் கப்பற்படை நவீன முறையில் அமைக்கப்பட்டு தூரக்கிழக்கு சமுத்திரங்களுக்கு வந்துவிட்டது.

வி வி வி வி வி

ராஜீய நிலமை. முக்கியமாக ராஜீய நிலமையைப்பற்றித்தான் மிஸ்ட்டர் சர்ச்சில் பேசினார் என்று சொன்னோம். நேசதேசத் தார்களிடையே இப்பொழுது நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கிறதென்று அவர் சொன்னார். நாஸிகளின் கொடுங்கோன்மைக்கும், நேசதேசப் பெருந்தன்மைக்கும் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்தும் முறையில் சமீபகாலம் வரையில் அச்சுக் கக்ஷியிலிருந்த நாடுகள் இப்பொழுது ஜெர்மனியை எதிர்த்துப் போராடுவதை அவர் எடுத்துக்காட்டினார். இவ்விதம் செய்துவரும் பின்லாந்தையும், ருமேனியாவையும் பழிவாங்கும் முறையில் ஜெர்மானியர்கள் தீக்கிரையாக்கிக் கொள்ளையடித்தும்வருகிறார்கள். இதற்குமாறாக, அந்நாடுகளின் பிடிவாதத் திற்காக அவைகளை சிக்ஷிக்க முகாந்திர மிருந்தபோதிலும் நேசதேசத்தார்கள் எதிர்பார்த்த தற்கு அதிகமாகவே தாராளமான யுத்த நிறுத்த ஷரத்துகளை ஏற்படுத்துகிறார்கள். பல்கேரியாவின் யுத்த நிறுத்த ஷரத்துகள்தான் இன்னும் பரிசீலனை செய்யப்படுகின்றன. ஏனெனில் சரணடைந்த நாடுகளில் பல்கேரியா மிகவும் இழிவான நடவடிக்கையுள்ளது. பிரதம மந்திரி சொல்லுகிறபடி பல்கேரியா அநேக காலம் வரையில் நல்நடத்தையை மேற் கொள்ளவேண்டும். அந்நாட்டிலுள்ள ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தி அது அதன் குற்றங்களை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டும்.

வி வி வி வி வி

போலந்து. இதன் நடவடிக்கை மாறுபாடானது. அதற்காகத்தான் பிரிடன் போர் தொடுத்தது. ஆகிலும் ருஷ்யாவின் எல்லைச்சரகத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்று பிரிடன் கவலைகொண்டிருக்கிறது. ருஷ்ய-போலிஷ் எல்லைச்சரகத்தைத் திருத்தியமைக்காமல் இது சாத்தியப்படாது. ருஷ்யா வுக்கும், போலந்துக்கும் உள்ள தகரார்களை இருவருக்கும் திருப்தி ஏற்படும் வகையில் தீர்த்து வைப்பதுதான் பிரிடனின் சிறந்த முயற்சியாகும்.

வி வி வி வி வி

இதாலி. இதாலியில் புதிய நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. படாக்ளியோ இதாலிப்படைகளை, முக்கியமாகக் கடற்படைகளை, நேசதேசத்தாரின் அமுலுக்குட்படுத்த பிரயத்தனம் செய்துவருகிறான். அம்பர்டோ இளவரசரும் ஜனங்களின் ஆதரவைப்பெற்றுவருகிறார். இதாலியில் உள்நாட்டு மனஸ்தாபங்கள் ஓய்ந்துவிடவில்லை. இதாலி அவைகளுக்கு இரையாகக்கூடாது. இதாலி பூராவும் விடுதலைபெறுமுன் அதன் பிரச்னைகளை முடிவுசெய்துவிடக்கூடாது.

பிரான்ஸ். நாஸிகளின் அக்கிரமத்தினால் அழிக்கப்பட்ட பிரான்ஸ் நான்கு வருடங்களுக்குப்பின் விடுதலை பெற்றபின் புனருத்தாரணம் செய்யப்படுகிறது. பிரான்ஸ் கூடிய சீக்கிரத்தில் வலுமிக்க, சுதந்திரமுள்ள, நேசதேச வல்லரசாகத் தோன்றுமென்று பிரிடன் நம்பியிருக்கிறது.

வி வி வி வி வி

தீமையின் பரிபாகம். காலச் சக்கரம் எதிரிகளைப் பழிவாங்க ஆரம்பித்து விட்டது. ஜெர்மனி மற்ற நாடுகளுக்கு இழைத்த தீங்குகளின் பலனை இப்பொழுது அனுபவித்து வருகிறது. ஜெர்மன் விமானப்படை விளைவித்த தீங்குகள் இப்பொழுது ஜெர்மனிக்குத் திரும்பி வந்துவிட்டன. இத்துடன் தாய்களின் அழுகுரலும், தாய்தந்தையர்களை விட்டுச் குழந்தைகளின் பிரிவும், நகரங்கள் காலி செய்யப்பட்டதும், அகதிகள் ரஸ்தாக்களில் கூட்டமாகச் செல்லுவதும், விருத்தர்களும், வாலிபர்களும் சேனைக்குத் திரட்டப்படுவதும், அகிழ்களை வெட்டுவதும், நெஞ்சொடிந்த ஸோல்ஜர் தாயகம் திரும்புவதும், பொது ஜனங்கள் இது வரையில் வசித்து வந்த இடத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்படுவதும், கொஞ்சம் கொஞ்சமாக படைகள் கக்ஷிமாறுவதும், உணவுப் பொருள் விநியோகம் தடைப்படுவதும், இது போன்ற அநேக அராஜகமான நடவடிக்கைகளும் காணப்படுகின்றன.

மேலும் மற்றொரு பழிவாங்கும் நடவடிக்கையும் காணப்படுகிறது. அயல்நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஜெனரல் ஈசன்ஹவர் ஒலிபரப்பு மூலம் அனுப்பிய யாதாஸ்துக்குப்பின் ஜெர்மனியில் 14 மிலியன் ஜனங்கள் கலகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். இது மகத்தான 5-ம்படை வேலையாகயிருக்கும். பிரிடிஷ், அமெரிக்க எஞ்ஜினியர்கள் ஜெர்மனிக்குள் கபடமாகச் சென்று நாசவேலைப் பகுதிகளைத் தயார் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு யுத்த அறிக்கைகள் பிரத்தியேகமாக அனுப்பப்படுகின்றன. அவர்களைக் காபந்து செய்துவரும் அதிகாரிகளையும், ரக்ஷகப்படைகளையும் புறக்கணித்து ஓட அவர்கள் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வருகிறார்கள்.

இதே சமயத்தில் நாஸிக்கக்ஷி இன்னும் நிர்வாகத்தை நடத்தி வருகிறது. க்வீபெக் மகாநாட்டிற்குப்பின் யுத்தக்குற்றவாளிகளை சிக்ஷைக்குட்படுத்த வேண்டுமென்ற முடிவு ஏற்பட்டதிலிருந்து புதிய பீதி உண்டாகியிருக்கிறது.

வி வி வி வி வி

விதி வசம். முன்பு இருந்த துணிவை இழந்த ஜெர்மன் பிரசார இலாகா புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்த பின் மாரிகாலத்திற்குப்பின் யுத்தப் போக்கில் அற்புதமான மாறுதல்கள் ஏற்படுமென்றும், ஜெர்மனிக்கு வெற்றிகிடைக்குமென்றும் இப்பொழுது வாக்குறுதி செய்து வருகிறது. மேலும் வந்ததை அனுபவிக்கவேண்டுமென்ற வேதாந்தமும் இப்பொழுது போதிக்கப்படுகிறது. அதற்கு ஒரு உதாரணம், ஜெர்மனியின் நண்பர்கள் ஒவ்வொருவராகக் கக்ஷி மாறுவதைப் பற்றி வியாக்கியானம் செய்த பொழுது டாக்டர் கோயபல்ஸின் பிரசாரகோஷ்டியைச் சேர்ந்த ருடால்ப் செம்லர் பின்வருமாறு சொல்லுகிறார்.

"ஒரு அதிருஷ்டப் போட்டியில் ஒரு குடும்பத்தாருக்கு லாபம் கிடைக்கும் பொழுது அதை பந்துக்கள் கவரமுயற்சி செய்வதிலிருந்து அதைக் காப்பாற்றுவது சிரமசாத்தியமானது. முன்பின் கேள்விப்படாத அத்தைமார்களும் அண்ணன் தம்பிகளும் திடீரென்று உறவாடுகிறார்கள். இதற்கு முன் தோன்றாத பாந்தவ்யம் இப்பொழுது அனுதாபம் காட்டும் முறையில் புதுப்பிக்கப்படுகிறது. அண்டை வீட்டார்களும் ஸ்நேகபாவத்துடனிருக்க முயற்சிக்கிறார்கள்.

"ஆகிலும் பரிசுபெற்றவர் ஆபத்தில் மாட்டிக்கொள்ளும் பொழுது எல்லாம் முற்றிலும் மாறுபாடடைகின்றன. அவனுக்கு செல்வச்செருக்கு ஏற்படலாம். அவன் சூதாடியிருக்கலாம். அல்லது நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பொருளை இழந்திருக்கலாம். முன்பு உல்லாசமான வாழ்க்கையை நடத்துபவர் இப்பொழுது தினசரி வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கும். இது துக்ககரமானது தான். அவனுக்கு வேறு வழியில்லை. இது தலைவிதியென்று நினைத்து அவன் சகித்துக்கொள்ள வேண்டியது தான். முன்பு உறவு கொண்டாடிய பந்துக்கள் இப்பொழுது கைவிட்டு விடுகிறார்கள். அவன

செல்வந்தனுக ஜீவனம் செய்து வந்தபொழுது பந்துக்கள் ஒத்துமையுடனிருப்பதாக வெளிக்காட்டினர்கள். இப்பொழுது ஒருவரும் அவனுக்கு பொருளுதவி செய்யமாட்டார்கள் அல்லது அவனுடைய தொழிலைப் புதுப்பிக்கவும் அவர்கள் ஒத்தாசை செய்ய முன்வரமாட்டார்கள். இவ்விதமாகத்தான் நமது நேச நாடுகளும் நடந்து கொள்ளுகிறுர்கள். பின்லாந்து இதற்கு ஒரு உதாரணம்."

வி வி வி வி வி

யுத்தப் போக்கு— ஆர்ன்ஹெம். ஸெப்டம்பர் 17-ம் தேதியன்று எதிரியின் பிரதேசத்தில் 60 மைல்கள் கொண்ட பிரதேசத்தில் ஹாலந்தில் விமான மூலம் படைகளிறங்கியது தான் ராணுவ சரித்திரத்திலேயே மிகவும் துணிவுகரமான நடவடிக்கையாகும். திரம் பொருந்திய படைகள் இறங்கிய ஆர்ன்ஹெமின் நடவடிக்கையின் போக்கில்தான் உலகத்தின் கவனம் இப்பொழுது ஆழ்ந்திருக்கிறது. ஆர்ன்ஹெம் ஜெர்மன் எல்லைச் சரகத்திலுள்ள நீண்ட போர்முனையின் வடக்குக் கோடியிலிருக்கிறது. அப்படைகள் ரைன் நதிகளின் கால்வாய்களும், ஓடைகளும் ஏராளமாக ஓடும் பிரதேசத்தை ஊடுருவிச் சென்று எதிரியின் படைவரிசைகளுக்குப்பின் செல்ல முயன்றன. இந்த அபாயத்தை மதித்து எதிரி பதில் தாக்குதல் செய்து விமானமூலம் இறங்கிய படைகளுக்குதவி செய்யச் சென்ற தரைப்படைகளுக்குப்பின்ஞலிலுள்ள போக்குவரத்து மார்க்கங்களைத் துணித்து விட்டார்கள்.

இந்தத் துணிவுகரமான நடவடிக்கையில் சில குறைவு பாடுகளுமிருந்தன. ஸீக்பிரட் அரணைத்தாண்டி விமான மூலம் குதித்து விடுவதென்ற பேச்சுகளெல்லாம் இந்த இடுக்கண்களை கவனிக்காமல் மதித்ததாகும். டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கும் விமான மூலமிறங்கும் படைகள் மிகவும் பலஹீனமானதாகயிருக்கின்றன. அவைகளின் வெற்றி தரை மூலமாக அவைகளுக்கு அனுப்பப்படும் உதவியைப் பொருத்தது. அதாவது தரைப்படைகள் விமான மூலமிறங்கிய படைகளுடன் துரிதமாக முன்னேறிச் சேர்ந்து கொள்ளவேண்டும். ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் தரை மூலம் படைகள் உதவிக்கு வராவிட்டால் விமானமூலமிறங்கிய படைகள் அழிந்து போனதாகக் கருதப்படவேண்டும். அவைகள் அதற்குமேல் சமாளித்து நிற்க முடியாது. ஆகையால் 9 நாட்கள் வரையில் அப்படைகள் சமாளித்து நின்றதென்பது அற்புதச் செய்கையாகும். உதவி துரிதமாக வராததற்கு நான்கு இடையூறுகள் இருந்தன. எண்டோவன், கிரேவ், நிஜ்மேஜன், ஆர்ன்ஹெம் முதலிய இடங்களை தரைப்படைகள் தாண்டவேண்டியிருந்தது. மூன்று இடங்களை அவைகள் தாண்டின. ஆர்ன்ஹெமிலிருந்து பின்வாங்கவேண்டி விட்டது. ஆகிலும் அந்த வீரர்களின் சிரமம் வீணுகப்போகவில்லை. அவைகளின் முயற்சியின் மூலம் தரைப்படைகள் மாஸ் நதியிலும், ரைன் நதிக்குச் சமீபத்திலும் ஸ்தாபித்துக் கொண்டன.

வி வி வி வி வி

ஆர்ன்ஹெம் வீரர்களுக்குப் புகழுரை. அவர்கள் அழியாப் புகழைப் பெற்று விட்டார்கள். ஜெனரல் மாண்ட்காமரி பின் கண்ட புகழுரையை வெளியிட்டிருக்கிறுர்.

"உங்களுடைய முயற்சி இகழ்ச்சி பெற்றிருந்தால் மற்றெல்லாப் போர்முனைகளிலும் நடவடிக்கைகள் சீர்கெட்டுப்போயிருக்கும். நீங்கள் இகழ்ச்சி பெருததால் எல்லாப் போர்முனைகளிலும் போர் திறம்பட நடைபெறுகிறது.

"ஆர்ன்ஹெமிலிருந்து நீங்கள் அனுப்பிய இறுதிச் செய்தியை பிரிடிஷ் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். "நாங்கள் சரணடைய மாட்டோம். எல்லோரும் கலைக்கப்படுவோம். எங்களால் சாத்தியமானதை நாங்கள் செய்தோம். இன்னும் விடாமுயற்சியுடன் போர் புரிவோம்.

"ஆர்ன்ஹெம் சம்பவத்தை விட சிலாகிக்கக்கூடிய சம்பவம் கிடையாது. இதற்குப் பின் நடைபெறும் சம்பவங்களெல்லாம் உங்களுடைய திறமைக்கு ஒப்பிடக்கூடியதாக இருக்க முடியாது.

"பிரிடிஷ் சாம்ராஜ்யப்படையில் உங்களைப் போன்ற ஆபீஸர்களும், மனிதர்களும் இருக்கும் வரையில் வருங்காலத்தில் நாம் அதிக நம்பிக்கை கொள்ளலாம்."

கலையும் பிடிபட்டது. நான்கு வருஷங்களாக ஜெர்மன் பீரங்கிகள் அமைக்கப்பட்டு பெரிய குண்டுகளை அனுப்பி வந்ததுமான கேப் கிரிஸ் நெஸ்ஸும் விழுந்துவிட்டது. டோவரின் நெடுநாள் துயரம் ஒழிந்தது. இனிமேல் கலையிலுள்ள பீரங்கிகள் அதன் பேரில் குண்டுகளை வீசாது. இனிமேல் டோவார் ஜனங்கள் ஒளிகளில் பதுங்கவேண்டியதில்லை. வெற்றிக்கொடிகள் டோவரின் வீடுகளிலும், தெருக்களிலும், சினிமாக்களிலும் பறக்கின்றன. ஆடவர்களும், ஸ்திரீகளும் தெருக்களில் கூத்தாடிக்கொண்டும் பாடிக்கொண்டும் செல்லுகிறார்கள். பாழாய்ப்போன வீடுகள் கட்டப்படுகின்றன. டோவாரின் தீரத்தை ஆர்ன்ஹெமில் சென்ற வீரர்களின் தீரத்துடன் ஒப்பிடலாம். ஐந்து வருஷங்களாக கால்வாய் கடற்கரையில் திலகம் போல் நின்று ஜெர்மனியின் வெடிகுண்டுகளை டோவர் சமாளித்தது. ஆகிலும் டோவரிலுள்ள ஜனங்கள் சாதாரண வாழ்க்கையைக் கைவிடவில்லை. அதன் ஜனங்கள் நாட்டை விட்டு ஓடவில்லை. பருந்துப் பாய்ச்சல் விமானங்களின் தாக்குதலையும் யந்திர, பீரங்கி பிரயோகத்தையும் கூட சகித்து நின்றார்கள். "பீரங்கி பிரயோகப் படுகுழி" என்ற அழியாப் பெயரையும் டோவர் பெற்று விட்டது.

வி வி வி வி வி

ஹாலந்து. மாஸ் நதி பிரதேசத்திலிருந்தும், வால், லெக் நதிகளின் முக்கோணத்திலிருந்தும் எதிரிகள் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். டர்ண்பாண்ட் கால்வாய் பலமாகத் தாக்கப்படுகிறது.

ஸீக்பிரட் அரணில் ஒரு புதியதாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. எஸ்தோனியா பூராவும் விடுவிக்கப்பட்டு விட்டது. லெக்கோஸ்லவேகியாவுக்கான போர் துவங்கி விட்டது. ஆஸ்திரியாவுக்கான போர் தூரத்திலில்லை

ருஷ்யர்களும், ருமேனியர்களும், யூகோஸ்லாவியர்களும் ஹங்கேரியில் போர் புரிந்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

இதாலி. கோதிக் அரண் மறைந்து விட்டது. சரித்திரப் புகழ்பெற்ற ரூபிகன் நதியைப் படைகள் தாண்டி விட்டன. நேச தேசப்படைகள் பொலோனு இமோலாவை நோக்கி முன்னேறுகின்றன.

வி வி வி வி வி

பர்மா. டிட்டிமுக்கான போர் சமீபித்து விட்டது.

வி வி வி வி வி

பஸிபிக். பாலாத்தீவுக் கூட்டத்தில் அநேக தீவுகள் ஆக்கிரமிக்கப்பட்டன.

பெல்ஜியத்தின் விடுதலை.

ஜனங்களின் சந்தோஷம்.

(அலெக்ஸாண்டர் கிளிப்போர்ட்,
டெயிலி மெயில் பத்திரிகை.)

யுத்தமிடும் படைகள் ஹாலந்து, ஜெர்மனி எல்லைக்குள் ஓடினாலும், பெல்ஜியத்தின் விடுதலைப்பற்றி ஒரு விஷயம் உற்சாகத்தோடு குறிக்கத்தக்கதாகும். இத்தேசத்தில் உண்மையிலேயே மக்கள் சுதந்திரமடைந்திருக்கின்றனர். இந்த உணர்ச்சியாலும், அவர்களின் நல்ல தன்மைகளாலும் அவர்கள் அடையவேண்டிய சுதந்திரம் எவ்வளவென்பதை நன்றாய் அளக்கலாம். இச்சுதந்திரத்தை நிலைப்படுத்துவதென்றால், நாம் எதற்காகப் போரிடுகிறோம் என்பதை நினைக்கச் செய்வதேயாகும்.

பெல்ஜியத்தில் 12 வீடுகளில் எனக்கு உபசாரங்கள் நடந்தன. ஒவ்வொருவரும் என்னை வரவேற்ற முறை சரிதானா என்றும், இது போதுமா என்றும் வினவினார்கள்.

அதுதான் பிரஸ்ஸல்ஸைப் பற்றிய விஷயம். புதிதாய் எழுந்ததும் விஸ்தரிக்க முடியாததுமான ஒரு உணர்ச்சி ததும்பும் வார்த்தைகளைக் கேட்கிறோம். இது ஜெர்மனியர் களையே ஆச்சரியப்படுத்தியது. சிறைப்பட்டுச் செல்பவர்கள் இக்கூட்டங்களைக் கண்டு மனந்தளர்ந்து செல்கின்றனர்.

பெல்ஜிய மக்கள் எங்களுக்காக தாங்கள் ஜெர்மனியருக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த பொருள்கள் அனைத்தையும் கொண்டுவந்து விட்டார்கள். பெல்ஜிய மக்கள் ஒரு விஷயத்தை எவ்வாறு செய்வது என்பதை நன்கு அறிந்தவர்கள். எத்தொழிலும் நெடு நாள் நிலைத்திராது என்பதை அறிந்தவர்கள். எனவே ஜெர்மானியர்களுக்குத் தெரியாமல் பல பொருள்களை ஒளித்து வைத்திருந்தனர்.

இதைப்பற்றியும் ஒரு சிறு கதையும் சொல்லுவார்கள். ஹாலந்திலும் டச்சுக்காரர்கள் பிடிவாதமாயும், தைரியமாயுமிருப்பார்கள். ஆனால் ஒரு தொழிலில் பழக்கமில்லாதவர்கள். ஜெர்மானியர்கள் ஏதாகிலும் ஒன்றைத் தங்களிடம் கொடுக்கச்சொன்னால் அப்போது அவர்கள் ஒன்றும் பேசுவதில்லை. எனவே ஜெர்மானியர்கள் அவர்களை கொள்ளையடித்தனர். பிரான் ஸில், மக்கள் தைரியமாயும் திடமாயும் இருப்பவர்கள் ஏதாகிலும் ஒன்றைக் கேட்டால் பிரெஞ்சு மக்கள் தாங்கள் ஒன்றும் கொடுக்கமுடியாது என்று சொல்லுவார்கள். எனவே ஜெர்மானியர் அவர்களை அடித்துப் பிடுங்கிக்கொள்ளுவார்கள். ஆனால் பெல்ஜியத்தில் அப்படி யில்லை. ஜெர்மானியர் எது கேட்டாலும் 'சரி, சரி' என்றே பதில் சொல்லுவார்கள். எனவே ஜெர்மானியர் இவர்களிடம் ஒன்றும் பெறவில்லை.

இதே முறையில் பெல்ஜிய மக்கள் உழைத்தனர். விடுதலை நிச்சயம் என்ற நம்பிக்கை யுடன் சேகரித்தார்கள். ஜெயத்தைக் கொண்டாட ஒருவித திராக்ஷை ரஸப் புட்டி இல்லாத வீடே பெல்ஜியத்தில் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும், யுத்தத்திற்கு முந்திய சுருட்டுகளும், காபி விதைகளும் இன்னும் காணலாம். இதை ஜெர்மானியர்கள் அறியவில்லை. அவர்களுடன் சிநேகமாயிருந்தனர். ஆனால் இதனால் பயனில்லை என்றதும் சரியாயிருந்தனர். ஆனால் பெல்ஜியரின் வீடாவது, கிளப்பாவது ஏதும் ஜெர்மானியர்களுக்குத் திறந்துவிடப்படவில்லை. ஒரே சிற்றுண்டிசாலைகளுக்கு மக்கள் சேர்ந்து போவதுமில்லை.

ஜெர்மானியர் பிரசாரவாயிலாக முயன்றனர். கோர்ட்ராயில் நேசதேச குண்டுகள் விழுந்தபோது, ஒரு உடைந்த பறக்கும் கோட்டை ஒன்றை அதன் சிப்பந்திகளுடன் ஊர்வல மாகக் கொண்டுவந்தனர். மக்கள் இடிந்த தங்கள் வீடுகளிலே நின்று கைகொட்டி சந்தோஷப் பட்டனர். பிறகு ஜெர்மானியர்கள் கொடுமைக்கும், சித்திரவதைக்கும் இறுதியில் கொள்ளை யடிக்கவும் முயன்றனர். ஆனால் அவர்கள் போன வேகத்தில் கொள்ளையடிக்க முடியவில்லை. கடைசியில் தங்களை வெறுக்குமாறு விட்டுச் சென்றிருக்கின்றனர். இத்தேசம் புதிதாய் சுதந்திரம் அடைந்திருக்கிறது. ஆனாலும் மிக்வும் உற்சாகத்தோடும் கொழுத்த செல்வத்தை உடையதாயிருக்கிறது. மக்கள் காண்பிக்கும் சந்தோஷத்திற்கு முடிவில்லை. இந்த உற்சாக உணர்ச்சியின் உண்மை, அவர்களின் நிலையினின்றும், பெருந்தன்மையினின்றும் வெளிப் படுகிறது.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு லக்ஸம்பர்க்கிற்கு இளவரசர் திரும்பினர்.

ஜனங்களின் நம்பிக்கைக்காக அவர்களைப் பாராட்டுகிறார்.

(H. R. மாடோல்)

விடுதலையடைந்த தங்கள் தலைநகரில் 3 நாட்கள் தங்கியிருந்து திரும்பிய லக்ஸம்பர்க் கோமகனும், இளவரசும் லண்டனுக்குத் திரும்பியபொழுது பின்வருபவைகளை என்னிடம் சொன்னார்கள். அதாவது, 4 வருஷங்கள், நாலு மாதங்களுக்குப் பிறகு தங்கள் நாட்டிற்கு சென்று வருவதைவிட மேலானதும், விசேஷமானதுமான சம்பவம் அவர்கள் வாழ்க்கையில் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். வீதியில் உள்ள எல்லா மக்களிடையேயும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. எல்லோரும் எப்போது கோமகனின் மனைவியார் நாட்டிற்கு வருவார்கள் என்பதையும் எதிர்பார்க்கின்றனர்.

"இன்னும் ஒளிந்துகொண்டே போரிடுபவர்கள் நிறைந்த பிரான்ஸினுள் முதல் முதல் நுழைந்தவரில் நான் ஒருவனாகும்" என்று இளவரசர் சொன்னார். "லக்ஸம்பர்க் நகரில்

உள்ள மக்கள் இப்பொழுதுதான் தங்கள் கஷ்டங்களினின்றும் விடுபட்டவர்களாக உளர் அவர்கள் வாழ்க்கையில் ஏதும் விசேஷ மாறுதல் இல்லை. பாரிஸில் நடந்ததுபோலவே, அவர்கள் ஜெர்மானியர்கள் பின்வாங்கியதும் தங்கள் விடுதலையைக்கொண்டாடினர். மாகாண கவர்னர் சின்னாட்கள் திரும்பி வந்திருந்தபோது சிறைப்பட்டோர்கள் சுடப்பட்டனர்''

1940-ம் வருஷம் மே மாதம் இளவரசும், கோமகனின் மனைவியாரும் விட்டோடிய ரோடேஞ்சின் அருகில் உள்ள எல்லையை இளவரசர் தாண்டினார். அங்குள்ள மலைச்சாரல்கள் இன்னும் அதே வர்ணங்களை உடையனவாய் இருந்ததைக் காண வியந்தார். பிரெஞ்சு எல்லையினருகிலுள்ள ஒரு சிறு கிராமத்திற்கு வந்தபோது, தன்னை யாரும் அறிந்துகொள்ள மாட்டார்கள் எனவே நினைத்தார். ஆனால் எல்லோரும் அவரை அறிந்துகொண்டு, அங்கு தங்களுடன் பீர் அருந்த அன்புடன் அழைத்தனர்.

''கடைசியாய் சந்தோஷ சமாச்சாரம் வெளிவந்தது. ஜெர்மானியர்கள் பின்வாங்குகின்றனர் என்றும், தலைநகரில் ஏதும் தாக்குதலோ, எதிர்ப்போ செய்யவில்லை என்றும் நான் அறிந்தேன். ஒரு நெடும் பாதை வழியாய் நான் நகரை அடைந்தேன். மாக்குவிஸ் நன்றாய் ஒழுங்கு படுத்தப்பட்டு முழு விசுவாசத்துடன் விரிசையாய் சென்றனர். அவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் உளர் என நான் அறிந்தேன். அவர்களில் ஜெர்மானியரை எப்போதும் எதிர்க்கத் தயாராய் ஆர்டெனிஸ் காட்டில் பல மாதங்கள் வசித்தவர்கள் உளர்''

''குயிஸ்லிங் கக்ஷியைச் சேர்ந்த கிராட்ஸென்பர்க்கைப் பற்றி என்ன சொல்லலாம்?''

''ஜெர்மனியர்களுடன் அவனும் ஓடி விட்டான். அப்போது தான் இங்கிருந்தால் கொல்லப்படுவேன் என்றும் சொல்லிக்கொண்டு ஓடிவிட்டான். அத்துடன் சின்னாட்களில் லக்ஸம்பர்க்கில் நடக்கும் விசாரணையில் தான் செய்த கெடுதல்களுக்காகப் பதில் சொல்லவர வேண்டியிருக்கும் என்றும் சொல்லிக்கொண்டு சென்றிருக்கிறான்.

வார்சுதாரான இளம் கோமகன் பிரின்ஸ் ஜான், இப்போது ஐரிஷ் கார்டில் ஒரு கமிஷன் வாங்கியிருப்பவர். தன் தந்தையாரை விடுதலையடைந்த நகரில் சந்தித்ததாகவும், அப்போது நடந்தவைகளையும் கூறினார். அவர்கள் இருவரும் தனித்தனியே பிரயாணம் செய்தவர்கள். 1940-ல் தன் நாட்டை விட்டுச்செல்லும்போது இந்த இளவரசு ஒரு பள்ளி மாணவன். இப்போது வயதடைந்த சிறிய மீசையுடனிருக்கிறார். முதன் முதலில் ஒரு பிரிடிஷ் லெப்டினெண்ட் உடை தரித்து அரண்மனையின் அருகில் லக்ஸம்பர்க் இளவரசைப்பற்றி விசாரித்தபோது, அவரை இன்னார் என்று மக்கள் அறியவில்லை.

''கோமகன் மனைவியார் எப்போது வருகிறார்கள்? பிரின்ஸ் ஜான் எப்போதுவருவார்?'' என்று அவர்கள் அடிக்கடி கேட்டார்கள் என்றும் சொன்னார். ''சில நிமிஷம் வரையில் தான் தான் பிரின்ஸ் ஜான் என்பதை வெளிப்படுத்தாமல் அவர்களை சிறிது ஏமாற்றம் செய்து சந்தோஷமடைந்தேன். அதுமுதல் சேர்ந்தார்போல் வெகு தூரங்கள் லக்ஸம்பர்க் வீதியில் நடக்கமுடியவில்லை. கூட்டத்திலுள்ள அனைவரும் உற்சாகமடைந்தனர். என் தந்தையார் சில நிமிஷங்கள் மக்களிடையே பிரசங்கம் செய்தார். என்னையும் பேசச் சொன்னார்.''

மூன்று லக்ஸம்பர்க் சமாசாரப் பத்திரிகைகள் ஜெர்மானியர் ஆக்ஷியின் கீழ் 4 வருஷங்கள் 4 மாதங்களும் இருந்த பிறகு, நாடு விடுதலையடைந்ததும் பழைய உருவுடன் வெளிவந்தன. இது பெரும் விஷயமாகும். ஏனெனில் மின்சார சக்தியில்லை. அதிகமான யந்திரங்களும், காகிதமும் கூட இல்லை.

''எங்கள் வீதிகளில் ஒன்றும் அடால்ப் ஹிட்லர் வீதி என்று பெயர் மாற்றப்பட்டிருந்தது. ஆனால் அது தன் பழைய பெயரான ''ஈவ்னிங ஸ்டாண்டர்ட்'' என்ற பெயரை திரும்பவும் அடைந்திருக்கிறது'' என்று சொல்லி இளவரசர் ஜான் முடித்தார்.

பிரெஞ்சு, பெல்ஜிய பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

கடுமையும், ருசியற்றதும்.

வெர்னன் பார்ட்லெட்

(நியூஸ் கிராணிகிள் பத்திரிகை).

விடுதலைபெற்ற பின் முன் முதலில் பிரசுரமான பிரெஞ்சு, பெல்ஜியப் பத்திரிகைகள் லண்டனுக்கு வந்தன. விலுக்கன்னியில் எல்லா பத்திரிகைகளும் யுத்தத்துக்கு முன்னிருந்த

படிக்கும் முறைப்படியும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் இரண்டு பக்கம் அடங்கியுள்ளன. காகித ஸப்ளை குறைந்துவிட்டபடியால் இந்த இதழ்கள் கிடைப்பதும்கூட அரிதாகிவிடும்.

பாரிஸ் ஸாயிர் பத்திரிகையில் புதிய தலையங்கம் அச்சிடப்பட்டிருக்கிறது. விடுதலை என்ற எழுத்துக்கள் பெரிதாக அதில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒரு இதழுக்குப் பதிலாக வெள்ளிக்கிழமையன்று பிரசுரமாகும் பாரிஸ் பிகாரோ என்னும் பத்திரிகை நான்கு பக்கங்களுள்ளது. அதில் இரண்டு பக்கங்களில் முன்போல் கலைஞ்ஞான கட்டுரைகளிருக்கின்றன.

பாரிஸிலுள்ள பொது ஜனங்கள், ஸ்திரீகளின் அலங்காரத்தைப் பற்றித்தான் கவனம் செலுத்திவருகிறார்களென்று பிரிடிஷ் அமெரிக்க யுத்த நிருபர்கள் சொல்லுவதற்கு பிரெஞ்சு பத்திரிகைகளில் யாதொரு அடையாளமும் காணப்படவில்லை. பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் கடுமையாகவும் ஆனால் ருசியற்றதாகவுமிருக்கின்றன. யுத்த அறிக்கைகளைவிட ராஜீய, பொருளாதார, ஜனசமூக பிரச்னைகள் தான் அவைகளில் மிகுதியாக விவாதிக்கப்படுகின்றன.

ஒத்துழைத்தவர்களைப் பழிவாங்குகிறார்களென்று பிரிடிஷ் பத்திரிகை நிருபர்கள் சொல்லும் விபரங்கள் நியாயமற்றவை என்று பிரெஞ்சு பத்திரிகைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. பிரெஞ்சு மாக்விப்படையிலுள்ளவர்கள் வாலிபர்கள். ஜெர்மன் நடவடிக்கையின் மூலம் அவர்களுக்கு அதிக அருவருப்பு ஏற்பட்டிருந்தால் அவர் பழிவாங்கும் முறையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். ஜெர்மனியுடன் ஒத்துழைத்தவர்களை அதிகாரிகளிடம் பரிசீலனை செய்ய ஒப்படைத்துவிட வேண்டுமென்று ஒவ்வொரு பத்திரிகையும் வற்புறுத்துகிறது. நாம் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே இவ்வித குற்றவாளிகள் பரிசீலனை ஏற்படுமென்று தோன்றுகிறது.

பேச்சுரிமை பெற்ற போதிலும் பிரான்ஸின் ஒற்றுமையை நிலைநாட்ட கடுமையான ஒழுங்கு முறை அவசியமென்று எதிர்ப்புப்படையைச் சேர்ந்தவர்கள் மறுத்துவிட்டார்கள் என்று பாரிஸ் பத்திரிகைகளில் வற்புறுத்தப்படுகிறது.

இந்த உணர்ச்சி பெல்ஜிய பத்திரிகைகளிலும் காணப்படுகிறது. ஆனால் அங்குள்ள இயக்கத்துக்கும், பிரான்ஸிலுள்ள எதிர்ப்பு இயக்கத்துக்கும் வித்தியாசமுண்டு. இதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவதாக, சென்ற யுத்தத்தில் எதிர்ப்பு இயக்கத்தை ஏற்பாடு செய்த விருத்தர்கள் இந்த யுத்தத்திலும் பெரும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, பிரெஞ்சு சேனையைப்போலில்லாமல் பெல்ஜிய சேனை ஜெர்மனியில் அடைபட்டுக்கிடக்கவில்லை. ஆகையால் அது கீழருப்பு வேலைக்கு பேருதவி செய்திருக்கிறது.

விடுதலை பெற்ற 48-மணிகளுக்குள்ளாகவே ப்ரஸ்ஸல்ஸில் பத்திரிகைகள் வெளிவந்தன. அதன் பத்திரிகாசிரியர்கள் ஜெர்மன் ஆக்கிரமிப்பு சமயத்தில் ஜெர்மனியின் அடக்குமுறைக்குட்பட்டு பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒத்துழைக்க மறுத்தவர்கள்.

ஜனசமூக கோஷ்டி நீதியும், சுதந்திரமும், சமாதானமும் வேண்டுமென்று வெளியிட்ட யாதாஸ்தை ஸெப்டம்பர் 5-ம் தேதி வெளிவந்த லி புபூபில் என்ற பிரஸ்ஸல்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

ஸெப்டம்பர் 7-ம் தேதி வெளிவந்த பிரஸ்ஸல்ஸ் சாயிா பத்திரிகையில் பெரிய எழுத்தில் பின் கண்ட தலையங்கம் அச்சிடப்பட்டிருந்தது. பாரிஸ் விடுதலை பெற்றுவிட்டது. நிர்வாகம் யாதொரு தணிக்கை முறையையும் கையாளாது."

எல்லா பத்திரிகைகளிலும, பெல்ஜியத்திலுள்ள ஜனங்கள் இனிமேல் சுதந்திரத்துடன் வாழலாமென்ற ஆறுதலை வெளியிடுகின்றன. பிரிடிஷார் வந்ததை பெல்ஜியம் குதூகலத்துடன் வரவேற்கிறது. ஸெப்டம்பர் 8-ம் தேதி வெளிவந்த இரண்டு பக்கங்களிலுள்ள ஸாயிர் பத்திரிகையில் நார்மண்டியின் வெற்றி வீரருக்கு பலமான வரவேற்பு என்ற தலையங்கத்துடன் மாண்ட் காமரியின் ஒளிப்படம் அச்சிடப்பட்டிருந்தது.

பாரிஸைப்போல் பிரஸ்ஸல்ஸில் வெளிவரும் பத்திரிகைகளிலும் பொதுமக்களின் சாவதானமான அலுவல்களைப்பற்றி கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கள்ள வியாபாரத்தை ஒழிக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டுமென்றும், உணவுப்பொருள்களை விநியோகம் செய்து தேசத்தின் பசிப்பிணியை ஒழிக்க வேண்டுமென்றும் ஜனங்களுக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. சுதந்திரம் பெற்றபின் வெளிவந்திருக்கும் பத்திரிகைகளிலிருந்து பிரான்ஸ், பெல்ஜியத்திலுள்ள பொது ஜனங்கள் விடுதலைப்படைகள் எதிர்பார்த்ததற்கு அதிகமாக உள்நாட்டு பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்களென்று சொல்லலாம்.

"சந்தோஷத்தையே மறந்தவர்கள்."

ஒரு ஜெர்மன் வீரனின் நாட் குறிப்பு.

(டெய்லி மெயில் பத்திரிகை.)

இதாலியில் போரிட்டவனும், தன் குறிப்பிலேயே "சிரிப்பதை மறந்துவிட்டேன்" என்று எழுதியவனுமான ஜெர்மன் வீரனின் நாட்குறிப்பு கீழ் வருபவையாம். 44-வது தரைப் படையில் இவன் ஸ்டாப் ஸார்ஜண்டாக வேலை பார்த்தான். ஆனால் இன்று எட்டாம் படையிடம் சிறைப்பட்டிருக்கிறான்.

அவன் குறிப்பில் 1944ம் வருஷம் ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் முடிய குறிப்புகள் இருக்கின்றன. அதன் பிறகு மிகவும் வெறுப்புடன் டைரியில் காணப்படுகிறது. "பிரிடிஷார் மாண்டி பாரெஸ்டோ படைப்பகுதியைக் கைப்பற்றியபோது அதில் உதறலுடன் கூடிய ஒரு வீரனையும் கண்டார்கள். டைரியின் பகுதியாவது.

ஜூன் 13—பளுவான சாமான்கள் உள. போக்குவரத்து இல்லை. கஷ்டத்துடன் இருக்க வேண்டும்.

ஜூன் 14—வேட்டை விமானங்களால் தாக்கப்பட்டது. எதிரி விமானத் தாக்குதல்கள். பதுங்கி இருக்கவேண்டியிருக்கிறது.

ஜூன் 15—சாப்பிட ஒன்றுமில்லை. பணமும் இல்லை.

ஜூன் 26—படைப் பகுதியில் மனச்சோர்வு—அதிகப்பட்ட நஷ்டங்கள்.

ஜூலை 8—கொசுக்களால் தொந்தரவு அதிகம்—தூக்கம் இல்லை—மறுபடியும் விமானத் தாக்குதல்கள்.

ஜூலை 10—மழை—பேன்கள் உபாதை.

ஜூலை 25—பகலில் சஞ்சாரம் செய்ய முடியாது. நம் சகாக்களில் இருவர் கொல்லப்பட்டனர். 30 எதிரிகளை சிறைப்படுத்தினோம்—ஸ்திரீகளின் அழுகைக்குரல்—அந்த இடத்திலேயே சுடவேண்டியிருந்தது-இந்தக் காக்ஷியை என்னால் பார்த்து சகிக்க முடியவில்லை.

ஜூலை 29—உணவுப் பொருள் வகையறுக்கள் சரியாகப் பட்டுவாடா ஆகவில்லை. சிகரட்டே இல்லை.

ஜூலை 30—மனைவியிடமிருந்து கடிதம் கிடைத்தது—வீட்டிலும் மனச்சோர்வு.

ஆகஸ்ட் 6—பெரும் பீரங்கிப் பிரயோகம் மனோதிடத்தைக் குலைத்தது. எதிரிகளை சிறைப்படுத்த வேண்டியது எங்கள் வேலை—ஆனால் அதில் எங்களுக்கு வெற்றியில்லை.

ஆகஸ்ட் 8—ஸார்ஜண்ட் பிஸ்ஷர் வலது பாதத்தை இழந்தார்.—அதிகமான உபாதை. ஆனால் சகாக்கள் இதைப் பொருட்படுத்தவில்லை.

ஆகஸ்ட் 10—உணவுப் பொருள் வகையரா வந்துவிட்டது. ஆனால் பெரும் பீரங்கிகள் எங்கள் வீடுகளை நாசப்படுத்தின. 20 பிரிடிஷ் வீரர்கள் காணப்பட்டனர். நாங்கள் பலஹீனமாயிருந்ததால் சுடமுடியவில்லை.

ஆகஸ்ட் 20—உணவுப் பொருள்கள் வகையரா குறைவுபடுகின்றன. கம்பெனி பீரங்கிப் பிரயோகத்தினிடையே பின்வாங்கியது. சிறு வழிகளிலும் குண்டுகள் சுடப்பட்டன.

ஆகஸ்ட் 21—புது நிலையங்கள் கட்டப்பட்டன. இதர நிலையங்களை எடுத்துக்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது. ஒவ்வொருவரும் வெறுத்துப் பேசினர். மாறுபட்டனர். முழுதும் நனைந்தோம். வெறுப்பு வார்த்தைகள் மேலும் இருந்தது. ஒருவன் இறந்தான். நான் அவனுடன் இருந்தேன்—தண்ணீர் தாகம் அதிகம்—சேறுயிருந்த குட்டையில் நான் நீர்பருகினேன். பிறகு பீரங்கிப் பிரயோகம் நடப்பதை பார்க்க வேண்டி தங்கினேன்.

ஆகஸ்ட் 22—எங்கள் நிலையங்களின்மேல் அதிகமான பீரங்கிப் பிரயோகம். பதுங்கும் குழிகள் பாதிக்குமேல் மூடிவடைந்தன. என் வலப்புறம் பீரங்கி சப்தம்—நான் தரைமேல் விழுந்து கடவுளை வேண்டினேன். என் மனைவி மக்களை நினைந்தேன். கார்ப்பரல் தைரியத்தை இழந்தார். எங்கள் இருவருக்குள்ளும் சிறு சச்சரவு, அந்த செக்ஷனை ஒரு கோயிலுக்குள் போகுமாறு உத்திரவிட்டேன். ஆனால் பீரங்கி குண்டுகள் அவ்விடத்தையும் இடித்தன. கார்ப்பரல் காயப்பட்டான்.

ஒவ்வொரு நிமிஷமும் சாவை எதிர்பார்க்கும் நாங்கள் உயிர் வாழ வழி கொடுக்குமாறு எங்கள் விதியை ஆளுபவரை வேண்டுகிறோம். எனவே நாங்கள் எல்லாம் சந்தோஷத்தை மறந்து சிரிப்பதையே மறந்தவர்களாகும். என் மனைவியின் கையில் உள்ள கடிகாரமும் நின்றுவிட்டது.

ஹிட்லரின் மிகவும் கொடுமையான "ரகசிய ஆயுதம்" முறியடிக்கப்பட்டது.

மலேரியா ஜுரம் உண்டாக்க முயற்சி.

(டெயிலி மெயில்).

மிகவும் கடுமையான, "ரகசிய ஆயுதம்" ஜெர்மானியர்களால் கண்டு பிடிக்கப்பட்டு இதாலியில் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் அதன்மேல் நேசக்கட்சிக்கு வெற்றியே கிடைத்தது.

பெர்லினிலுள்ள விஞ்ஞானிகள் ஒரு வித கிருமியின் உதவியைக்கொண்டு நம் சேனையை அழிக்க முயன்றனர். அதில் அவர்கள் வெற்றி பெற்றிருந்தார்களேயானால் ஆண், பெண் குழந்தை என்று சொல்லக்கூடிய இம்மூவகையிலும், இதாலிய மக்கள் ஆயிரக்கணக்கில் அழிந்திருப்பார்கள்.

உலகத்திற்கு கொய்னா ஸப்ளை செய்வதை ஜப்பான் தன் கை வசம் கொண்டுள்ளது என்ற ஒரு தைரியத்தைக்கொண்டு ஹிட்லர் உலகிலே கொசுக்களின் உதவியால் மலேரியா ஜுரத்தைப் பரப்ப திட்டம் செய்தான். பின்வாங்கும் ஜெர்மானியர்கள், இதாலியில் உள்ள புல் பிரதேசங்களில் ஒளிந்தனர். அவ்வாறு அவர்கள் ஒளியும்போது, நேசதேச உத்தியோகஸ்தர்கள், எதிரிகள் கொசு வலைகளை அப்புறப்படுத்துவதையும், தண்ணீரை பல கால்வாய்களிலிருந்து, மலேரியாக் கிருமிகளை வளர்ப்பதற்காக, எடுப்பதையும் கவனித்தனர்.

இச்சமயங்கள் எல்லாம், இதாலியில் மலேரியா ஜுரம் அதிகப்பட்டபோது, ஸ்திரப்படுத்தப்பட்டது. பிறகு ஜெர்மன் படைகளுடன் சில சிற்றுயிர் நூலறிஞர்கள் செல்கிறார்கள் என்ற விஷயம் தெரியவந்தது. ஒரு பிரதேசத்தில் மட்டும் ஜெர்மானிய விஞ்ஞானிகள் இருவர் வேலை பார்த்தார்கள். ராக்பெல்லரி பௌண்டேஷனைச் சேர்ந்த கர்னல் பால் ரஸ்ஸல் என்பவர் இந்த யுத்தத்தைத் தடுக்க முக்கிய மலேரிய தடுக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவரும் பிரதம தலைவராய் இந்த யுத்தத்தைப் பொருத்தவரை வெற்றியே அடைந்தார். இதைப்பற்றிய விவரமான குறிப்பு ஒன்றும் கொடுத்துள்ளார். இது ஒரு முறை மக்களிடையே ஒருவித வாதத்தை உண்டாக்கியது என்றும் சொல்லுகிறார்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

8. சுதந்திரத்துக்கு அஸ்திவாரக்கல்.

விவசாயம்—(1).

சொற்பொழிவாளர்கள். மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
ஸர் ஜான் ரஸ்ஸல்.
ஸர் மால்கம் டார்லிங்.

1944-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 18-ம் தேதி திங்கட்கிழமை இரவு 9-45 மணிக்கு பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்தில் பிரசுரமானது.

ஸ்டீட்.—யுத்தத்துக்குப்பின் உலகத்தில் வறுமையின்மை ஏற்படுவது சீர்திருத்தத்தில் ஒரு அம்சம் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னார். நானூறு மிலியன் மக்களுக்கு வறுமையின்மை ஸ்வதந்திரமென்றால் அவர்களுக்குப் போதுமான உணவுப் பொருள் கிடைக்குமென்று பொருள்படுகிறது.

ரஸ்ஸல்.—ஹாட்ஸ்பிரிங்ஸ் மகாநாட்டிலும் இவ்விதம்தான் யோசனை செய்தார்கள்.

ஸ்டீட்.—தேவையின்மை என்றால் பசிப்பிணி இன்மையும் ஏற்படவேண்டுமென்று அவர்கள் கண்டுபிடித்தார்கள். பசிப்பிணிதான் முகான்மையானது.

டார்லிங்.—வங்காளப்பஞ்சம் இதைத்தெளிவாக விளக்கியது. யுத்தத்துக்குப்பின் பொதுவாக உணவுப் பஞ்சம் ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. எல்லோருக்கும் உணவுதான் முக்கியமான பிரச்னை.

ஸ்டீட்.—டார்லிங், இது நிச்சயம்தான்.

ரஸ்ஸல்.—இதை ஒப்புக்கொள்ளுவோம். எல்லா தேசங்களிலுள்ள விவசாயிகளும் கௌரவமான வாழ்க்கையை நடத்தவேண்டும்.

டார்லிங்.—இதற்குமுன் அவர்கள் நன்ருய் கவனிக்கப்படவில்லை.

ரஸ்ஸல்.—அநேக தேசங்களிலுள்ளவர்கள் விவசாயிகள். அவர்கள் கௌரவமான வாழ்க்கையை நடத்திவரவில்லை. அவர்கள் நல்ல வாழ்க்கை முறைகளை அறிந்து விட்டார்கள். அவர்களும், அவர்களுடைய சந்ததியார்களும் நல்ல முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் பிரியப்படுகிருர்கள். வருங்காலத்தில் சமாதானம் நிலைபெறவேண்டுமாஞல் விவசாயிகளின் வாழ்க்கை முறை சீர்படவேண்டும்.

ஸ்டீட்.—உலகத்தில் எந்த இடத்திலும் சுபிக்ஷமான நிலைமை காணப்படா விட்டால் உற்பத்திப் பொருள்களுக்குப் பெரிய வியாபார ஸ்தலங்கள் கிடைக்கமாட்டாது.

ரஸ்ஸல்.—இதைத்தவிர ஒவ்வொரு தேசத்திலும் புரட்சி ஏற்படக்கூடும்.

ஸ்டீட்.—இழிவான வாழ்க்கை விதிவசமென்று விவசாயிகள் இப்பொழுது ஒப்புக் கொள்ளவில்லையா?

ரஸ்ஸல்.—ஆமாம். சிறந்த வாழ்க்கை முறையிருக்கிறதென்று அவன் கண்டுபிடித்து விட்டான்.

ஸ்டீட்.—ஒரு உதாரணத்தைச் சொல்லுவோம். 1917-ல் போல்ஷிவிஸம் வந்துவிடு மென்று பயந்து ருமேனியா விவசாயிகள் சம்பந்தமாக ஒரு சீர்திருத்தத்தை ஆரம்பித்தது. நிலஸ்வான்தார்களின் சொத்துகள் சின்னுபின்னம் செய்யப்பட்டு விவசாயிகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டன. இப்பொழுது சோளத்துக்குப் பதிலாக அவர்கள் கோதுமையை உட்கொள்ளுகிருர்கள். ருமேனியாவின் கோதுமை ஏற்றுமதி குறைந்தது. ருமேனியா விவசாயியின் வாழ்க்கை முறையில் அபிவிருத்தி ஏற்பட்டது.

ரஸ்ஸல்.—யுத்தத்துக்குமுன் ஐரோப்பாவில் இரண்டு வகைப்பட்டநில அனுபவமிருந் தது. பெரிய ஜமீன்களும், சிறிய நில ஸ்வான்தார்களுமிருந்தார்கள். விவசாயி களின் ஜனத்தொகை அதிகரித்தது. நிலங்கள் மறுபடியும் பிரிக்கப்பட்டு விட் டன. அதிக நிலங்களும் தேவைப்பட்டன. நிலம் சாகுபடி செய்கிறவருக்குச் சொந்தமானதென்ற தோற்றம் உண்டாகிற்று.

டார்லிங்.—இந்தியாவிலும் இந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆறு மகாணங்களில் சராசரி ஒருவர் ஆறு ஏகரா நிலத்தைத்தான் சாகுபடி செய்து வருகிருர்.

ஸ்டீட்.—இத்துடன் ஜனத்தொகையும் அபாரமாக அதிகரித்து வருகிறது.

டார்லிங்.—ஆம். பெரிய மிராசுதார்கள் கொஞ்சம் நிலத்தை விவசாயிக்குக் கொடுக்கி ருர்கள். மிராசுதார் சிரமப்படாமல், குடியானவர்களுக்கு உதவி செய்து நிலத்தை விருத்தி செய்யும் முறைகளை நாம் பாராட்டவேண்டும். 1920-ம் வருஷத்தில் நான் ஜெர்மனியிலிருந்தபொழுது முதலாளி ஆட்சி சிறந்ததா அல்லது சிறிய குடியானவர்களின் ஆட்சி சிறந்ததாவென்று மாக்ஸ்ஸெரிங் என்ற ஜெர்மனியின் முகான்மையான விவசாய பிரமுகரைக் கேட்டேன். இவை இரண்டும் கலந்து நின்ருல்தான் அபிவிருத்தி ஏற்படுமென்று அவர் சொன்னுர்.

ரஸ்ஸல்.—ஆனுல் முதலாளி வருமானத்தை மட்டும் வசூலிக்காமல் நில அபிவிருத்தியி லும் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டாமா?

டார்லிங்.—ஆம். அப்படி அவன் செய்யாத பக்ஷத்தில் அவன் விலகிக்கொண்டு குடியானவனிடம் ஒப்படைத்துவிடவேண்டும். அப்பொழுதான் அதிக உணவுப் பொருள்களை அவன் சம்பாதிக்கலாம். பெரிய மிராஸ்தார் அக்கரை எடுத்துக் கொண்டால் அவன் உணவுப்பொருள்களை விருத்தி செய்யவும், கனிவர்க்கங்களைப் பயிர் செய்யவும், கால்நடைகளை வைத்துக்கொள்ளவும் உதவி செய்யக்கூடும். உன்னுடைய அபிப்பிராயமென்ன?

ரஸ்ஸல்.—மிராஸ்தார்களிருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. டென்மார்க்கு ஜனங்கள் அவர்களில்லாமலேயே ஒத்துழைப்பின் மூலம் அநேக காரியங்களை சாதித்திருக்கி ருர்கள்.

டார்லிங்.—அது வேறு விஷயம். இந்தியாவிலும் கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தி அடைந்தால் நிலைமையில் மாறுதல் ஏற்படும். ஆனால் இப்பொழுது நிலங்கள் தூக்குத் தூக்காகயிருக்கின்றன. விவசாயத்துக்குறிய நிலங்களும் குறைவாக இருக்கின்றன.

ஸ்டீட்.—மிராஸ்தார் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் அல்லது நிலத்தை குடியானவனிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்பது நம்முடைய முதல் தீர்மானம்.

ரஸ்ஸல்.—ஆம். கிழக்கு ஐரோப்பிய விவசாய சம்பந்தமான சீர்திருத்தத்தின் லக்ஷியம் இது தான். விவசாயிகளுக்கு அதிக நிலம் கிடைத்தபோதிலும் அவனுடைய வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்படவில்லை. சிறிய நில ஸ்வான்தார் தான்யங்களை உற்பத்திசெய்ய முடியவில்லை. சொல்ப வேலைக்காரர்களும், யந்திர சாதனமிகுதியும் உள்ள பெரிய பண்ணையில்தான் உற்பத்தி அதிகப்படும். உற்பத்தி அதிகரித்தால்தான் வாழ்க்கை முறைசீர்படும்.

ஸ்டீட்.—ருஷ்யாவைப்போல் இங்கும் சமுதாயப்பண்ணையிருக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

ரஸ்ஸல்.—அப்படியில்லை ஜனத்தொகை குறைவாகவுள்ள பெரிய பண்ணையில்தான் இது சாத்தியமாகும். ஐரோப்பாவில் விவசாயிகள் மிகுதியாகவும், சிறிய பண்ணைகள் ஏராளமாகவுமிருப்பதால் இது சாத்தியமில்லை. அதிக யந்திரசாதனங்களை உபயோகிக்க முடியாது. தான்யங்களை அபிவிருத்திசெய்ய முயற்சித்தால் வாழ்க்கை முறை அதிகாரிக்காது. வாழ்க்கை முறையை அபிவிருத்து செய்ய வேண்டுமானால் கால் நடைகளை உபயோகித்து பழவர்க்கங்களையும் பயிரிட வேண்டும்.

டார்லிங்—நான் இதை ஆமோதிக்கிறேன். இதே விஷயத்தை 22 வருடங்களுக்குமுன் கால்வெர்ட் என்பவர் "பஞ்சாபின் செல்வமும், க்ஷேமமும்" என்ற புத்தகத்தில் விளக்கிக்காட்டி யிருக்கிறார். இந்த அபிப்பிராயங்கள் பரிணமிக்க காலம் செல்ல வேண்டும். இன்னும் பயிர் செய்யப்படும் தான்யங்களின் ரகம் வேறுபாடடையவில்லை. கால்நடைகளும் அதிகமாகயில்லை. கிழக்கு ஐரோப்பாவின் நிலங்களைத் துண்டாடியபின் கூட்டுப்பண்ணை கையாளப்பட்டு வருகிறதா?

ரஸ்ஸல்.—சாத்தியமான இடங்களில் இது நடைபெற்றுவருகிறது. ஆனால் இது சுலபமானதல்ல. கூட்டுப்பண்ணை முறையை அனுஷ்டிப்பதற்கு தொழில்முறைக் கல்வி அவசியம். கூட்டுறவு முறையில் தன்னலத்தைக் கோராமல் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்ற உணர்ச்சியும் ஏற்படவேண்டும். அவன் வைத்திருக்கும் எருது எல்லோருக்கும் உபயோகப்படக்கூடியதாக இருக்கவேண்டும். தனிப்பட்டவர்களுக்கு சாத்தியமில்லாத அநேக காரியங்களை கூட்டுறவு சங்கம்தான் செய்யக் கூடும். கூட்டுப்பண்ணையில் தனிப்பட்டவர் சாமான்களை வியாபாரத்திற்குக் கொண்டுபோக முடியாது. அவனுடைய மனைவி முட்டைகளையும், கனிகளையும், காய்கறிகளையும் சந்தைக்குக் கொண்டுபோகலாம். ஆனால் அவன் முதலாளிகளின் தரகுக்காரர் வசம் அகப்பட்டுக்கொண்டு தவிப்பான்.

ஸ்டீட்.—இந்த நிலைமை இந்தியாவுக்குப் பொருந்தும்.

டார்லிங்.—இந்த சங்கடத்தையும் கூட்டுறவு சங்கம்தான் நிவர்த்திக்கும். கூட்டுப் பண்ணைக்கு நிலங்களைத் துண்டாடுவதென்ற ஒரு இடையூறு இருந்துவருகிறது. 1938-ம் வருஷத்தில் பல்கேரியாவுக்குச் சென்றபொழுது கிராமத்திலுள்ள நிலங்களை ஒன்றுசேர்த்து விட்டார்கள் என்று ஒரு கிராமத்தில் கேள்விப்பட்டேன். பஞ்சாபில் 1 மிலியன் ஏகராக்கள் கொண்ட நிலங்களை ஒன்றுபடுத்திவிட்டோமென்று நான் பெருமையுடன் சொன்னேன். இந்தியாவின் மத்திய மாகாணங்களையும் இதில் நான் சேர்த்துச் சொல்லியிருக்கலாம். கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பாகம் இவ்விதம் ஒன்றுபடுத்தப்பட்டிருக்கிறது.

ரஸ்ஸல்.—இந்தியாவில் அநேக சங்கடங்கள் காணப்படுகின்றன. நிலங்கள் துணுக்காகயிருக்கின்றன. விவசாயி ஏழையாக யிருக்கிறான். முதலாளிகளின் வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறான். ஜாதி முறைப்பட்டி அவனுக்கு சாத்தியமற்ற அநேக காரியங்களை அவன் செய்துவருகிறான். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள அவனுக்கு மார்க்கமில்லை. மேலும் தான்ய உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இந்தியாவில் நிலங்களில் 70 சதவிகிதம் தான்யங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிழக்கு காலீஷியாவில் இது 75 சத விகிதமாக இருக்கிறது.

டார்லிங்.—துண்டாடுவது விவசாயத்துக்கு இடையூரானது. அந்த இடங்களில் உணவுப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யமுடியாது. இதாலியும், பிரான்ஸும் இதை உணர்ந்துவிட்டன. துண்டாடுவதன் மூலம் பத்தில் ஒன்பது குடியானவர்களுக்கு நல்ல வாழ்க்கை கிடையாதென்று இதாலியில் அபிப்பிராயப் படுகிறார்கள்.

ரஸ்ஸல்.—ஆமாம். விவசாயி நிலங்களை ஒருமைப்படுத்துவதை ஆரம்பத்தில் ஆமோதிப்பதில்லை.

டார்லிங்.—அவனைச் சரிப்படுத்துவதும் கஷ்ட சாத்தியமான வேலையாகும்.

ரஸ்ஸல்.—இந்தச் சிறிய பண்ணைகளிலும் ஜன சமூக நீதிமுறையிருக்கிறது. ஒவ்வொரு வரிடமும் நல்ல நிலங்களும் கெட்ட நிலங்களுமிருக்கின்றன. இந்தச் சிறிய நிலங்களில் நூதன முறைகளை மேற்கொள்ள முடியாததாகையால் அந்த ஸ்வான்தாரை நிலங்களை ஒன்றுபடுத்தும் இயக்கத்தில் சேரவேண்டுமென்று புத்திமதிகளைப் புகட்டி ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும்.

டார்லிங்.—பஞ்சாபிலும், மத்திய மாகாணத்திலும் இவ்விதமாக குடியானவர்களை நாம் இசையும்படி செய்து விட்டோம்.

ரஸ்ஸல்.—போலந்தில் இது மட்டும் போதவில்லை. ஆனால் போலிஷ் விவசாயி பெரிய பண்ணையின் உபயோகத்தை நன்கு அறிந்தான். விவசாய முறையை அதிகரிக்கலாமென்றும், அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாமென்றும் அவன் கண்டு பிடித்தான்.

டார்லிங்.—பஞ்சாபில் சேர்க்கை முறையை அனுஷ்டித்த பின் விவசாயியின் வருமானம் 15, முதல் 25 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அவனுடைய வருமானம் அதிகரிப் பதற்கு வேறு சுலபமான வழியில்லை.

ஸ்டீட்.—துண்டாகயிருக்கும் நிலங்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்பது நம்முடைய இரண்டாவது தீர்மானம். கூட்டுப்பண்ணைக்கு இது முற்போக்கான நடவடிக்கை. ருஷ்யாவில் கூட்டுப்பண்ணை எவ்விதம் பலனளித்து வருகிறது? இந்தியாவும் அதை மேற்கொள்ளலாமென்று சொல்லுவார்களா?

ரஸ்ஸல்.—இந்தியாவின் நிலைமை முற்றிலும் மாறானதால் அதை இங்கு அனுஷ்டிக்க முடியாது. ஆகிலும் பிரிடிஷ் நிபுணர்களைப்போல இந்தியர்களும் அதை ஆராய்ச்சி செய்து அனுபவம் பெறலாம். பண்படுத்தாத நிலங்கள் ஏராளமாக ருஷ்யாவி லிருந்ததாலும், நிலங்களுக்காக நெருக்கடி ஏற்படாததாலும் ஒருமைப்படுத்துவது ருஷ்யாவில் வெற்றி பெற்றது. இந்தியாவில் ஜனநெருக்கம் அதிகம். பண்படுத்தக் கூடிய நிலமும் சொல்பமாகயிருக்கிறது.

டார்லிங்.—பிரிடிஷ் இந்தியாவில் பண்படுத்தக்கூடிய வரையில் 100 மிலியன் ஏகரா பூமியிருக்கிறது. இந்தியாவிலுள்ள இந்த பிரதேசங்களை யுத்தத்துக்குப்பின் புல் டோஜர், ரஸ்தா சமப்படுத்தும் யந்திரங்கள், வெடிமருந்துகள் மூலம் சரிப்படுத்தி சாகுபடிக்குக் கொண்டுவரலாமென்று இந்தியக் காட்டிலாகாவைச் சேர்ந்த டாக்டர் கோரி சொல்லுகிறார். இது நம்பிக்கையை ஊட்டுகிறது. இது சாத்தியமானால் உணவுப்பொருள் அதிகரிக்கும். கூட்டுப்பண்ணை முறைகளையும் நாம் கையாள முயற்சி செய்யலாம்.

ரஸ்ஸல்.—விவசாயத்திற்கு நீர்ப்பாசன வசதி வேண்டும். மேலும் தண்ணீரில்லாமல் சாகுபடி செய்யும் முறைகளை அபிவிருத்தி செய்தால் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம். ருஷ்யாவில் 1920-க்குப்பின் ஜனத்தொகை அதிகரிப்புடன் விவசாயம் செய்யப்படும் பிரதேசங்களும் அதிகரித்து விட்டன. ஜனத்தொகை 30 சதவிகி தம் அதிகரித்து விட்டது. விவசாயம் செய்யப்படும் பிரதேசம் 27 சதவிகிதம் அதிகரித்து விட்டது.

ஸ்டீட்.—இந்தியாவிலும் ஜனத்தொகை பெருவாரியாக அதிகரித்து விட்டது. ருஷ்யா வைப் போல் விவசாயமும் அதிகரித்து விட்டதா?

ரஸ்ஸல்.—கடைசியாகக் கிடைத்த கணக்குகளிலிருந்து ஜனத்தொகைக்கு அதிகமாக உணவுப் பொருள் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இந்தக் கணக்குகள் 1939-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டன. அதன் பின் ஏராளமான நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்தியாவின் உணவுப்பொருள் நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறது.

டார்லிங்.—அது எவ்விதமிருப்பினும் வாழ்க்கை முறைகள் குறைவாகத் தானிருக்கின்றன. ரஸ்ஸல் சொன்ன பிரகாரம் யுத்தத்திற்குப் பின் திரும்பிவரும் குடியானவர்கள் இந்த நிலைமையை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் நாம் உணவுப் பொருள்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். கூட்டுப்பண்ணை பயன்படுமோவென்று நான் ஆலோசனை செய்து வருகிறேன். ருஷ்யாவில் இது வெற்றிகரமாக இருக்கிறதென்று சொன்னீர்கள். ஆனால் "ருஷ்ய விவசாயி" என்ற புத்தகத்தில் ஸர் ஜான்மேனர்ட் எழுதியிருக்கும் குறிப்புகள் என்னை பிரமிக்கச் செய்கின்றன. கூட்டுப்பண்ணைமுறை ஏகராவின் உற்பத்தியை அதிகரிக்கவில்லை. அப்படியானால் ருஷ்யா எவ்விதத்தில் வெற்றி பெற்றிருக்கிறது.

ரஸ்ஸல்.—அவர் என்னிடமிருந்து புள்ளி விபரங்களை அறிந்தார் போலும்.

டார்லிங்.—ஆகையால் இந்த அபிப்பிராயத்துக்கு உத்தியோக முறையில் ஆதரவு இருக்கிறது.

ரஸ்ஸல்.—ஒரு ஏகராவின் விளைவு அதிகரித்திருக்கிறதென்பதற்குத் தெளிவான ருஜுக் கிடையாது. புள்ளி விபரங்கள் மாறிமாறி யிருக்கின்றன. முக்கியமாக உணவுப் பொருள் உற்பத்தியில் குறைவான ஜனங்கள்தானீடுபடுகிறார்கள். மற்றவர்கள் தொழிற்சாலைகளில் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள்.

ஸ்டீட்.—ஸர். ஜான், நீங்கள் ருஷ்யாவுக்குக் கடைசியாக எப்பொழுது சென்றிருந்தீர்கள்?

ரஸ்ஸல்.—யுத்தத்துக்கு முன் 1930-ம் வருஷத்திலும் அங்கு சென்றிருக்கிறேன்.

ஸ்டீட்.—நிலங்களை நன்றாய் சமப்படுத்திய பின் தானே?

ரஸ்ஸல்.—1930-ல் தான் அந்த நடவடிக்கை ஆரம்பம்.

ஸ்டீட்.—1930-ல் மாஸ்கோவில் அயல் நாட்டு ஸ்தானீகர் காரியாலயத்திலிருந்த பொருளாதார மந்திரி டாக்டர் ஷாட்டுக்குப் பின்வருமாறு எழுதினான் "ருஷ்யாவில் படையெடுத்தால் யூக்ரேனிலுள்ள விவசாயிகள் உங்களை வரவேற்பார்களென்று எண்ண வேண்டாம். பஞ்சமும், வறுமையும் இருந்த நாளில் அவ்வித வரவேற்பு ஏற்பட்டிருக்கக்கூடும். அறுவடைக்கும், மூடுபனிக்கும் மத்தியில் நிலத்தை 18 இஞ்சு ஆழம் வரையில் உழுது மாரிகாலத்தில் விதைத்து விடுகிறார்கள். பனி மூடிவிடும் பொழுது விதைகள் மெதுவாக முளைத்து விடும். பனிஉருகும் பொழுது ஜலம் விதைகளை அடித்துச் செல்ல முடியாது. ஆகையால் ருஷ்யாவில் பஞ்சமே ஏற்படாது. இப்பொழுது மகசூல் அதிகம். விவசாயிகளும் திருப்தியுடனும், தேக ஆரோக்கியத்துடனும் வசித்து வருகிறார்கள்."

டார்லிங்.—கூட்டுப்பண்ணை மூலம் ருஷ்யாவின் உணவுப்பொருள் அபிவிருத்தி எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறதென்பதைப்பற்றி எனக்கு இன்னும் தெளிவு படவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். விவசாயி இனிமேல் நில ஸ்வான்தாராக இருக்கமுடியாது. டிராக்டர் யந்திரங்களின் உதவியேற்பட்டுவிட்டதால் அவன் தனிமையில் ஒன்றும் செய்யமுடியாது. இவ்விரண்டும் இந்தியாவுக்குப் பொருந்தாது. விவசாயி நிலத்தை இழக்க பிரியப்படமாட்டான். அவன் செய்யக்கூடிய அலுவல்களும் ஒன்றுமில்லை. ஆகையால் அவனுக்கு வேலைகளைக் கற்பிக்கவேண்டும். உணவுப்பொருள்களை அதிகரிக்கவேண்டும். அவனுடைய குடும்பத்தார்களுக்கு அலுவல்களையும் ஏற்பாடுசெய்யவேண்டும்.

ஸ்டீட்.—ருஷ்யாவைப்போல இந்தியாவிலும் இதற்குப் பரிகாரம் தொழிலபிவிருத்தி தான் என்று நினைக்கிறீர்களா?

டார்லிங்.—ஒருவகையில் ஆம். ஆனால் ஜனத்தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. விவசாய அபிவிருத்திதான் மிகவும் அவசியமானது. இதுதான் டாக்டர் கொரியின் அபிப்பிராயம் என்று நினைக்கிறீர்களா?

ரஸ்ஸல்.—இந்தியாவின் விவசாய அபிவிருத்திக்கு தண்ணீர் வசதிக் குறைவுதான் முக்கியமான குறைவு.

டார்லிங்.—காய்ந்த பூமிகளின் நிலமை இதுதான். சிறிது மழை பெய்தாலும் அதை நம்பி பயிர்களை உற்பத்தி செய்யக்கூடவில்லை. தண்ணீர் ஸப்ளையை அதிகரிக்க கிணறுகளையும், குளங்களையும், கால்வாய்களையும் நாம் அதிகரிக்கவேண்டும். கால்வாய்களை வெட்டுவதில் அதிகப் பொருள் செலவிடப்பட்டிருக்கிறது. ஆகிலும் ஏராளமான தண்ணீர் வீணாக சமுத்திரத்துக்குச் செல்லுகிறது. ஒரு நிபுணர் சொல்லுகிறபடி கால்வாயில் செல்லும் ஜலங்களில் 50 சத விகிதம்தான் வயல்களுக்குப் பாய்ந்து செல்லுகிறது.

ஸ்டீட்.—தண்ணீர் வசதியை அதிகரிக்கவேண்டுமென்று ஏற்பட்டபோதிலும் இன்னும் ஒரு பிரச்னை இருக்கிறது. பிரான்ஸில் அநேக பாகங்களில் குடியானவர்களுக்கு விவசாயம் மட்டும் வருடம் பூராவாகவும் அலுவல்களைத் தந்துவிடவில்லை. அவர்கள் மின்சாரத்தை உபயோகப்படுத்தி குழாய்களைச் செய்துவருகிறார்கள். வைர வேலையையும் சிறிது செய்து வருகிறார்கள். ஓய்வு நேரங்களில் அவர்கள் இந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழில் மூலமாகவும், விவசாயம் மூலமாகவும் அந்நாடு சுபிக்ஷமாக இருந்துவருகிறது.

இந்தியாவில் மின்சாரசக்தி ஏராளமான இடங்களில் அமைக்கப்பட்டுவிடும். அப்பொழுது சிறிய யந்திரங்களை உபயோகிக்க வசதி ஏற்படும். ரஸ்தா பிரச்னையைத் தீர்த்துவிட்டால் போக்குவரத்து சாதனங்கள் ஏற்படும். கிராமத் தொழில்களை அதிகரித்தால் வாழ்க்கை முறை அதிகரிக்கும்.

டார்லிங்.—இந்த நடவடிக்கை மூலம் விவசாயிக்கு அதிக அலுவல் ஏற்படும். ஆகிலும் அவனுக்கு அதிக உணவுப் பொருள்கள் கிடைக்காது.

ஸ்டீட்.—வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை வாங்க அவனுடைய செல்வ நிலைமையை அது அதிகரித்திருக்கும்.

டார்லிங்.—ஆம். ஒருவனின் உணவுப் பொருள்களை அவரே உண்டுபண்ணவேண்டுமென்பது சிறந்ததுதான். இந்தியாவில் விசேஷ சௌகரியமேற்பட்டிருக்கிறது. உள்நாட்டில் ஏராளமான பண்டகசாலைகளிருக்கின்றன. அவைகளுக்கு நல்ல திட்டம் ஏற்பட்டால் விவசாயி உணவுப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு போகலாம்.

ரஸ்ஸல்.—இவையெல்லாம் உணவுப் பொருள் என்ற பதத்தின் அருத்தத்தைப் பொருத்தது. உணவுப் பொருளை இரு வகைப்படுத்தலாம். உஷ்ணத்தை உண்டுபண்ணும் பொருள்கள். தேக புஷ்டிக்குரிய பொருள்கள். இந்தியாவில் முதல் ரகப் பொருள்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றனவென்று சொல்லலாம். உணவுப்பொருள் ஸப்ளை போதுமானதென்று சொல்லும்பொழுதெல்லாம் முதல் ரகத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம்.

ஸ்டீட்.—உஷ்ணப்படுத்தும் பொருள்களென்றால் கோதுமை முதலிய பொருள்கள் என்றுதான் பொருள்படுமா?

ரஸ்ஸல்.—கோதுமை, அரிசி, சாமை எல்லாம்தான். ஆனால் புஷ்டியுள்ள ஆகாரங்கள் குறைவாகயிருக்கின்றனவென்றுதான் நான் நினைக்கிறேன்.

ஸ்டீட்.—புஷ்டி தரும் ஆகாரமென்றால் காய்கறிகளைக் குறிப்பிடுவதா?

ரஸ்ஸல்.—முக்கியமாக, முட்டைகள், பால், பழம், காய்கறிகள் முதலியவைகள். இந்தியாவில் அவைகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது அவசியம். அவைகளின் குறைவினால்தான் அநேக தொத்து வியாதிகள் உண்டாகியிருக்கின்றன. அவைகளை விருத்தி செய்தால்தான் சாதாரண இந்தியரின் வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்படும்.

டார்லிங்.—நான் இதைப் பூராவும் ஆமோதிக்கிறேன். இந்தியாவின் உணவுப்பொருள் நிலமையில் அளவை விட தரம் தான் குறைவாகயிருக்கிறது. அநேகர் ஏராளமான பொருள்களைப்பெற்றிருக்கிறார்கள். ஆனால் அநேகர்கள் சமத்துவமான அல்லது பலவகைப்பட்ட உணவுப் பொருள்களை போதுமான அளவில் பெற்றிருக்கவில்லை.

ஜெர்மனிக்கு சங்கடம்.

நீங்கள் தாராளமாக யுத்த நிதிக்கு அளிக்கும் நன்கொடைகள் இந்தியாவில் மதராஸுக்கு முதல் ஸ்தானத்தைத் அளித்துவிட்டன. அவைகள் அநேக வழிகளில் விநியோகம் செய்யப்படுகின்றன. போர் முனையிலும், ரஜாவிலுமுள்ள தென் இந்தியப் படைகளின் வசதிகளுக்கும் ஒரு பங்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

ஆர்தர் ராபர்ட் ஹாலில் சங்கீதம் பாடிக்கொண்டிருந்தபொழுது ஒரு பூனை குறுக்கிட்டது. அதை உற்று நோக்கி "சீ, போ, நான் தனியே பாடிக்கொண்டிருக்கிறேன். விமர்சனம் செய்யவில்லை" என்று சொன்னார். ஆகிலும் விவரங்களைக் குறிப்பிடுவது உபயோகமுள்ளதுதான். ஆகையால் இங்கு மதராஸ் மாகாண கவர்னரின் யுத்த நிதியின் விநியோகத்தைப் பற்றிய விவரங்களைக்கூற முன் வருகிறேன்.

மொத்த வசூல் தொகை ரூ. 3,17,03,525—7—11. அதில் எதிரியை பாதிக்கக்கூடிய வகையில் ரூ. 1,18,00,000 விமானங்களைக்கட்ட பிரிடனுக்கு அனுப்பப்பட்டது. நாம் வாங்கிய 30 வெடி விமானங்களும், 60 சண்டை விமானங்களும் நமக்கு கௌரவத்தை சம்பாதித்தன. மதராஸ் மாகாண வாசிகள் அவைகளின் நடவடிக்கைகளை கவனித்து வந்திருக்கிறார்கள். ஜெர்மனியில் சில நகரங்கள் அழிப்பட்டதற்கு நமது விமானங்கள் அதிக உதவி செய்திருக்கின்றன. அந்த விமானிகளை நாம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

வசதிகளுக்காக 40 லக்ஷம்.

யுத்தம் இந்தியாவை நெருங்குவதைக் கண்டு ஜனங்கள் மற்ற தேவைகளுக்கும் பொருளீட்டினார்கள். கவசம்பூண்ட மோட்டார்களைக்கட்டுவதில் 11 லக்ஷம் செலவிடப்பட்டது. ஜப்பானியர்கள் இனிமேல் வால் ஆட்ட முடியாமல் அழிபட்டு விடுவார்கள். எதிரிகளை அழிப்பதைவிட நமது படைகளுக்கு வசதிகளை அளிப்பது அவசியமானது. துருப்புகளின் வசதிக்காக சந்தாதார்கள் 40 லக்ஷம் ரூபாயை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதில் செலவாகாத மூன்றில் ஒரு பாகம் போக பாக்கி, படைகளின் வாழ்க்கையை உல்லாசப்படுத்த உபயோகப்படுத்தப்பட்டன. மிஸ்டர் நோயல் கவர்ட் சொன்ன பிரகாரம் காயம்பட்ட ஸோல்ஜருக்கு ஜெர்மனியிடமிருந்து பயமில்லை. கொசுவினிடமிருந்துதான் அதிகத் தொந்தரவு ஏற்பட்டது. ஆகையால் சிப்பாய்க்கு மலக்கிலேசமும் அசௌகரியமும்தான் அதிக சிரமத்தைக் கொடுக்கக்கூடியது. இதை நாம் ஒருவாறு நிவர்த்தி செய்திருக்கிறோம்.

சந்தாதார்களிடையே எது உசிதமான வசதி? படையிலுள்ள ஸோல்ஜருக்கு வசதிகள் அளிப்பதற்காக பொது ஜன சங்கங்களுக்கு எவ்வளவு உதவி அளிப்பது என்ற விஷயங்களில் அபிப்பிராயபேதங்கள் உண்டாகலாம். கிருஸ்தவ வாலிபர்களின் சங்கமும், புனருத்தாரண சேனையும் இவைபோன்ற மற்ற சங்கங்களும் யுத்தத்திற்குபின் முன்னேற்றம் அடைவதற்காக அவர்களுக்கு நாம் ஏன் இப்பொழுது பொருளுதவி செய்யவேண்டும் என்று ஒரு சிலர் கேட்கிறார்கள். துருப்புகளுக்கு இப்பொழுது வசதி ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்று தோன்றும் பக்ஷத்தில் யுத்தத்துக்குப்பின் எவர் சௌகரியமடையப்போகிறார்கள் என்பதைப் பற்றி நாம் இப்பொழுது கவலைப்படவேண்டியதில்லை.

இந்திய சிப்பாய்க்கு விசேஷ கவனிப்பு.

யுத்தநிதி பிரிடிஷ் துருப்புகளின் சௌகரியத்தைத்தேடுகிற தென்றும், இந்தியத் துருப்புகளின் வசதிகளை கவனிப்பதில்லை என்றும் சிலர் பொய்வதந்திகளை கிளப்பிவருகிறார்கள். இதை நம்பக்கூடிய அறிவீனர்கள் கூட்டுறவு யுத்த சகாய டெப்போவைப் பார்வையிட்டால் இந்தியச் சிப்பாய்க்கு எவ்வளவு தூரம் உதவி அளிக்கப்படுகிறது என்பதை அவர் சாங்கோபாங்கமாக அறியக்கூடும். மாகாணத்திலுள்ள எல்லாத் துருப்புகளுக்கும், வெளி நாடுகளிலுள்ள மதராஸ் மாகாணத்துருப்புகளுக்கும் வசதிகளை அளிப்பதுதான் யுத்த நிதியின் நோக்கம். ரஜாவில் வந்திருக்கும் 14-வது சேனையைச் சேர்ந்த துருப்புகளுக்கு போஷணை செய்வதற்காக ரூ. 60,000 உத்தரவாயிருக்கிறது. இந்த மாகாணத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் துருப்புகளுக்கு தாய் பாஷையில் பத்திரிக்கைகளை வழங்க ஒரு வருஷத்திற்கு 1,50,000 ரூபாய்களைச் செலவிடவேண்டுமென்று நிதியின் நிர்வாகக்கமிட்டிக்கு ஒரு பிரேரணை பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் துருப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் கிராமபோன்கள், தாய் பாஷையிலுள்ள பாட்டுகள், புத்தகங்கள் இவைகளைப்பற்றிய பூரா விவரங்களும் எனக்குக் கிடைக்கவில்லை. இதைப்பற்றி கூட்டு யுத்த சகாய இலாகா உனக்கு தகவல்களைக் கொடுக்கும்.

யுத்த நிதியின் தொகைகள் யுத்தக் கைதிகளின் க்ஷேம அபிவிருத்தியையும் கோருகின் றன. சில நாட்கள் வரையில் மத்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு நாம் பொருளை அனுப்ப வில்லை. நாம் அனுப்பும் சாமான்கள் எதிரி வசமுள்ள ஸோல்ஜர்களிடம் போய்ச்சேரும் என்ற உறுதி ஏற்படவேண்டுமென்று நாம் விரும்பினோம். இது நிச்சயம் ஏற்பட்டபின் நாம் யுத்த நிதியிலிருந்து 17½ லக்ஷம் ரூபாய்களை அனுப்பியிருக்கிறோம்.

தகுதியான எந்த அவசியத்தையும் நாம் புறக்கணிக்கவில்லை.

மாலுமிகளுக்காக ஏற்பட்ட ஜார்ஜ் மன்னர் நிதிக்கு 4 லக்ஷமும், இந்திய மாலுமிகளுக் காக ஏற்பட்டுள்ள அமெரி சீமாட்டி நிதிக்கு 3 லக்ஷமும் அனுப்பியிருக்கிறோம். கண்ணிழந்த சிப்பாய்களுக்கு உதவியளிக்கும் ஸெயின்ட் டன்ஸ்டன் நிதிக்கும் ரூ. 70,000 நன்கொடை அனுப்பியிருக்கிறோம். டேராடூனிலுள்ள ஸெயின்ட் டன்ஸ்டன் ஹாஸ்டலில் என்ன நடை பெறுகிறதென்பதைப்பற்றிய ஸர்க்லுதா மாகன்ஸி யிடமிருந்து சந்தோஷகரமான அநேக கடிதங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கிருஸ்துமஸ் சமயத்தையும் நாம் மறந்துவிட வில்லை. சென்ற வருஷத்தைப்போல இவ்வருடமும் மாகாணத்துக்கு வெளியே உள்ள இந்தி யத்துருப்புகளுக்கு 20,000 பார்ஸல்கள் அனுப்பப்படும். இந்நாட்டிலுள்ள துருப்புகளுக்கு கிருஸ்துமஸ் விருந்தும் வழங்கப்படும். இந்த விருந்து மற்ற மாகாணங்களுடன் சேர்ந்து அட் ஜுடெண்ட் ஜெனரல் நிதி மூலமாக நடத்தப்படும்.

யுத்த நிதியைச் செலவிடுவதைப்பற்றி எழுத்து மூலமாக எனக்கு ஒரு குறைவுகளும் அனுப்பப்படாவிட்டாலும், 3 கோடி ரூபாய்களை சந்தாதாரின் அபிப்பிராயப்படி செலவிடுகிறார் கள் என்று ஒவ்வொரு சந்தாதாரும் ஒப்புக்கொள்ளமாட்டார். ஆகிலும் அவரவருடைய இஷ்டப்படி பொருள் செலவழிக்கப்படுகிறது என்று ஒவ்வொரு சந்தாதாரும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் அவருக்கு இஷ்டமான சேவையில் பொருளை ஈடுபடுத்தினால் அப்பொருள் அவ்விதமே செலவிடப்படும். படை ஆபிஸர்களிட மிருந்தும், தனிப்பட்ட ஸோல்ஜர்கள், மாலுமிகள், விமானிகளிடமிருந்தும் நூற்றுக்கணக்கான பாராட்டுச் செய்திகள் வந்திருக்கின்றன. கவர்னரின் யுத்த நிதிக்கு பொருளீட்டுவது அவசி யம் என்று அவைகள் வெளிப்படுத்துகின்றன. பொருளும் அவ்விதமே செலவிடப்படுகிறது என்று நாம் உறுதி கூறுகிறோம்.

தேசீய சேமிப்புப் பத்திரங்கள்.

நல்ல வட்டி : பொருளும் பத்திரம்.

விவரம்.—ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 எல்லா போஸ்டாபீஸுகளிலும் கிடைக்கும்.

12 வருஷத்தில் பூர்த்தியாகும். நடுவில் வேண்டுமானால் மூன்று வருஷத்துக்குப்பின் கூடிய தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

வட்டி :—4⅙ சத விகிதம். வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கிடையாது. ரூ. 10 12-வருஷத்தில் ரூ. 15 ஆகிறது.

தேசிய சேமிப்பு பத்திரங்களின் மூலம் நீங்களும் சேமித்து இந்தியாவிற்கும் நல்ல செல்வமளிக்கிறீர்கள்.

எதிர்காலத்தின் க்ஷேமத்தை இன்றே கோருங்கள்.

தேசிய சேமிப்புப் பத்திரங்களை உடனே வாங்குங்கள்.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

15—11—44 முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 218. (4-வது பிரிவு).

7-10-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
8-10-44	கீரப்பழனி	... ,,	7.00
,,	ஆலூர்	... ,,	7.30
9-10-44	புத்தாம்பூர்	... ,,	7.00
,,	வைத்திக்கோவில்	... ,,	7.30
10-10-44	நார்த்தாமலை	... மாலை	7.00
,,	உப்பிலியக்குடி	... ,,	7.30
11-10-44	வடவாளம்	... ,,	7.00
,,	சம்மட்டிவிடுதி	... ,,	7.30
12-10-44	அண்டக்குளம்	... ,,	7.00
,,	கிள்ளனூர்	... ,,	7.30

பிரஸங்கம் 219. (5-வது பிரிவு).

17-10-44	வெள்ளனூர்	... மாலை	7.00
,,	செம்பாட்டூர்	... ,,	7.30
18-10-44	புலியூர்	... ,,	7.00
,,	கண்ணங்குடி	... ,,	7.30
19-10-44	மலைக்குடிப்பட்டி	... மாலை	7.00
,,	தலையானூர்	... ,,	7.30
20-10-44	பள்ளிவாசல்	... ,,	7.00
,,	பில்லமங்கலம்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

7—10—44	திருமெய்யம்.
8—10—44	தீத்தான்விடுதி.
10—10—44	வடகாடு.
12—10—44	கீழாநிலை.
13—10—44	புதுக்கோட்டை.
17—10—44	குடுமியாமலை.
19—10—44	ஆலங்குடி.
20—10—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—11-10-44.